ஒவ்வொரு மன்வந்தரத்திற்கும், ஆதிஸந்தி அந்தஸந்தி புண்டு. அவைகள் முறையே 1. கிருதயுகம்=1,728,000 வர்ஷங்கள். ஒரு மன்வந்தரத்தின் அந்தஸந்தியின் பின்பாதி அடுத்தமன்வந்தரத்தின் ஆதிஸந்தி. 14 மன்வந்தரங்கள் +15 ஸந்திகள்=1 கல்பம். அதாவது $(14\times71+\frac{4}{10}\times15)=1{,}000$ மஹாயுகங்கள்= 4,320,000,000 வர்ஷங்கள். ப்ரஹ்மாவின் இரவும் பகலும் (ப்ரஹ்மதினம்)=2 கல்பங்கள். 360 ப்ரஹ்மதினங்கள்=ப்ரஹ்மாவின் ஒரு வர்ஷம். நூறு ப்ரஹ்மவர்ஷங்கள்=ப்ரஹ்மாவின் ஆயுஸ்.=மஹாவிஷ்ணுவிற்கு 1 நிமேஷம்.—(ஸூர்யஸித்தாந்தம்.)

(அதாவது, இப்பொழுது ஆண்டுவரும் ப்ரஹ்மாவினுடைய ஆயுஸில் 51-வது வர்ஷத்தில், 1-வது நாளில், ச்வேதவராஹமென்ற முதல் கல்பத்தில், 7-வதான வைவஸ்வதமன்வந்தரத்தில், 28-வது மஹாயுகத்தில், இரண்டாவதான த்ரேதாயுகத்தில், ஸ்ரீராமனுடைய அவதாரம்.)

15 நிமேஷங்கள்	= 1 காஷ்டை.
30 கலைகள்	= 1 முஹூர்த்தம்.
30 முஹூர்த்தங்கள்	= 1 இரவும் பகலும் (தினம்.)
15 தினங்கள்	= 1 பக்ஷம்.
2 பக்ஷங்கள்	= 1 மாஸம்.
6 மாஸங்கள்	= 1 அயனம்.
2 அயனங்கள்	= 1 வர்ஷம.
1 வர்ஷம்	= 1 தேவதினம்.

கிருதயுகம்=4,000 தேவவர்ஷங்கள்+ஸந்தி 400+ஸந்த்யம்சம் 400=4,800.

த்ரேதாயுகம் =3,000 தேவவர்ஷங்கள்+ஸந்தி 300+ஸந்த்யம்சம் 300=3,600.

த்வாபரயுகம் = 2,000 தேவவர்ஷங்கள்+ஸந்தி 200+ஸந்த்யம்சம் 200=2,400.

கலியுகம்=1,000 தேவவர்ஷங்கள்+ஸந்தி 100+ஸந்த்யம்சம் 100=1,200.

1 மஹாயுகம்=12,000 தேவவர்ஷங்கள்.

தினத்தின் கணக்குவரைக்கும், விஷ்ணுபுராணத்தில் சொல்லியபடி கூர்மம், மார்க்கண்டேயம், மத்ஸ்யம், வாயு, லிங்கம் முதலிய புராணங்கள் சொல்லுகின்றன.

மனுஸ்மிருதி I. 64-ல் நிமேஷக்கணக்குமாத்ரம் ஸூர்யஸித்தாந்தத்தையும், பவிஷ்யபுராணத்தையும் ஒத்திருக்கிறது.

பத்மபுராணத்தில் 30 கலைகள் = ஒரு க்ஷணம்; 12 க்ஷணங்கள் = ஒரு முஹூர்த்தம். இதைத்தவிர மற்றபாகங்கள் விஷ்ணுபுராணத்தையொத்திருக்கின்றன.

பவிஷ்யபுராணத்தில் 18 நிமேஷம் = 1 காஷ்டை என்பதைத் தவிர மற்ற விஷயங்கள் பத்மபுராணத்தையொத்திருக்கின்றன. மஹாபாரதம் மோக்ஷதர்மத்தில் 30 கலைகளும் 30 காஷ்டைகளும் ஒரு முஹூர்த்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரஹ்மகைவர்த்தத்திலும், பாகவதத்திலும்

2	பரமாணுக்கள்	= 1 அணு.
3	அணுக்கள்	= 1 த்ரஸரேணு.
3	த்ரஸரேணுக்கள்	= 1 த்ருடி.
100	த்ருடிகள்	= 1 வேதை.
3	வேதைகள்	= 1 லவம்.
3	லவங்கள்	= 1 நிமேஷம்.
3	நிமேஷங்கள்	= 1 க்ஷணம்.
5	க்ஷணங்கள்	= 1 ஒரு காஷ்டை.
15	காஷ்டைகள்	= 1 லகு.
15	லகுக்கள்	= 1 நாழிகை.
2	நாழிகை	= 1 முஹூர்த்தம்.
7	நாழிகை	= 1 யாமம் அல்லது 1 ப்ரஹரம்.
8	யாமம்	= 1 இரவும், பகலும்

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஹரிவம்சத்தில், 10 தேவவர்ஷங்கள் = மனுவின் ஒரு தினம்.

10	தினங்கள்	= 1 பக்ஷம்.
10	பக்ஷங்கள்	= 1 மாஸம்.
12	மாஸங்கள்	= 1 ருது.
6	ருதுக்கள்	= 1 வர்ஷம், அதாவது 72,000 தேவவர்ஷங்கள்.

ப்ரஹ்மகைவர்த்தபுராணத்தில், ப்ரஹ்மாவினுடைய ஆயுள் 108 வர்ஷங்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

வரி 5. மஹர்ஷி.

மஹர்ஷிகள்: வாலகில்யர்கள் வைகானஸர்கள் என்று இருவகை.

"ப்ரப்ரஹ்மத்தினுடைய நகங்களிலிருந்து உண்டானவர்கள் வைகானஸர்கள், பின்பாகத்தி(வாலி)லிருந்து உண்டானவர்கள் வாலகில்யர்கள்."—(ச்ருதி.)

1. கிழக்கில்வஸிக்கும் ரிஷிகள்—கௌசிகர், யவக்ரீதர், கார்க்யர், காலவர், கண்வர்.

2. தெற்கில்—ஸ்வஸ்த்யாத்ரேயர், நமுசி, ப்ரமுசி, அகஸ்த்யர் (அத்ரி, ஸுமுகர், விமுகர்.—திலகவ்யாக்யானம்.)

3. மேற்கில்—ருஷத்கு, கவஷர், தௌம்யர், ரௌத்ரேயர்.—(கௌக்ஷேயா-திலக.)

4. வடக்கில்—வஸிஷ்டர், கசயபர், அத்ரி, விசவாமித்ரர், கௌதமர், ஜமதக்னி, பரத்வாஜர்.—(வா-ரா. 7. 1.)

கிழக்கில்—யவக்ரீதர், ரைப்யர், ஔர்வாவஸு, ஔஷீஜர், கக்ஷீவான், பலன், கண்வர், பர்ஹிஷத்; இவர்கள் மஹேந்த்ரனுடைய குருக்கள்.

தெற்கில்—உன்முசு, ப்ரமுசு, ஸ்வஸ்த்யாத்ரேயர், திருடவ்யர், ஊர்த்வபாஹு, திருணஸோமா, அங்கிரஸ், அகஸ்த்யர்; இவர்கள் யமனுடைய ரித்விக்குகள்.

மேற்கில்—திருடேயு, ரிதேயு, பரிவ்யாதா, ஏகதர், த்விதர், த்ரிதர், அத்ரியின் புத்ரராகிய ஸாரஸ்வதர்; இவர்கள் வருணனுடைய ரித்விக்குகள்.—(உஷங்கா, கிருஷர்; சாந்திபர்வம், 208.)

வடக்கில்—அத்ரி, வஸிஷ்டர், கச்யபர், கௌதமர், பரத்வாஜர், விசவாமித்ரர், கௌசிகர், ரிசீகருடைய புத்ரராகிய ஜமதக்னி; இவர்கள் குபேரனுடைய குருக்கள். (மஹாபாரதம், ஆனுசாஸன பர்வம், 150.)

ரிஷிகள் மூன்றுவகை:—1. விசவாமித்ரரைப்போல் அரசர்களாயிருந்து ரிஷியானவர்கள் ராஜர்ஷிகள்.

2. நாரதரைப்போல் தேவதைகளாயும் ரிஷிகளாயுமிருப்பவர்கள் தேவர்ஷிகள்.

3. வஸிஷ்டர் முதலியவர்களைப்போல் ப்ரஹ்மபுத்ரர்களாயாவது, ப்ராஹ்மணர்களாயாவதிருக்கும் ரிஷிகள் ப்ரஹ்மர்ஷிகள்.—(விஷ்ணுபுராணம், 3, 6.)

1. ப்ராஹ்மணர்களுடைய கோத்ரங்களை ஸ்தாபித்த ரிஷிகளான கசயபர், வஸிஷ்டர், அங்கிரஸ், அத்ரி, ப்ருகு என்ற ஐந்து ப்ரஜாபதிகளின் வம்சத்தில் பிறந்தவர்கள், ப்ரஹ்மர்ஷிகள்.

2. தாமனுடைய புத்ரர்களாகிய நரநாராயணர்கள், க்ரது வென்னும் ப்ரஜாபதியினிடத்திலிருந்து உண்டான வாலகில்யர்கள், புலஹரென்னும் ப்ரஜாபதியின் புத்ரனான கர்த்தமர், புலஸ்த்யருடைய புத்ரனான குபேரன், ப்ரத்யூஷனுடைய புத்ரனான அசலன், கச்யபபுத்ரர்களான பர்வதநாரதர்கள், தேவர்ஷிகள்.

3. இக்ஷ்வாகு முதலிய அரசர்கள், ராஜர்ஷிகள்.

ப்ரஹ்மர்ஷிகள் ப்ரஹ்மலோகத்திலும், தேவர்ஷிகள் தேவலோகங்களிலும், ராஜர்ஷிகள் இந்த்ரலோகத்திலும் வஸிக்கிறார்கள்.—வாயுபுராணம்.

வரி 6. வேதங்களையும்.

ஆதியில் வேதம் லக்ஷம் க்ரந்தங்களாய் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதை இந்த ஸ்வாயம்புவமன்வந்தரத்தில் இருபத்தெட்டு சதுர்யுகங்களிலும், மஹாவிஷ்ணு வ்யாஸரூபியாய் அவதரித்து அநேக பாகங்களாகப் பிரித்திருக்கிறார். ப்ரஹ்மா, ஸ்வாயம்புவமநு, உசனஸ், பிருஹஸ்பதி, ஸவிதா, யமன், இந்த்ரன், வஸிஷ்டா, ஸாரஸ்வதர், த்ரிதாமா, த்ரிவிஷர், பரத்வாஜர், அந்தரிக்ஷா, வப்ரீ, த்ரையாருணர், தனஞ்சயர், கிருதஞ்சயர், ரிணர், பரத்வாஜர், கௌதமர், உத்தமா, வேணர், திருணபிந்து, வால்மீகி, சக்தி, பராசரர், ஜதுகர்ணர் என்றவர்களும், இந்த சதுர்யுகத்தில் கிருஷ்ணத்வைபாயனரும், வரும் சதுர்யுகத்தில் த்ரோண புத்ரனான அச்வத்தாமாவும் வ்யாஸர்கள். கிருஷ்ணத்வைபாயனர், ப்ரஹ்மாவால வேதங்களைப பிரிக்கும்படி கட்டளைசெய்யப்பட்டு, பைலரை ரிக்வேதத்திற்கும், வைசம்பாயனரை யஜுர்வேதத்திறகும், ஜைமினியை ஸாமவேதத்திற்கும், ஸுமந்துவை அதர்வவேதத்திற்கும் சிஷ்யர்களாக ஏற்படுத்தினர்.

பைலர் ரிக்வேதத்தை இரண்டு ஸம்ஹிதைகளாகப் பிரித்து இந்த்ரப்ரமதி, பாஷ்கலி என்றவர்களுக்குக் கொடுத்தார். பாஷ்கலியென்பவர் தன்னுடைய சாகையை நான்காகப் பிரித்துப் பௌத்யர், அக்னிமாடரர், யாக்ஞயவல்க்யர், பராசரர் என்ற தனது நான்கு சிஷ்யர்களுக்கும் கொடுத்தார். இந்த்ரப்ரமதி தன்னுடைய சாகையை மாண்டுகேயர் என்ற தனது புத்ரனுக்கு உபதேசித்தார். (பிறகு ஸத்யச்ரவஸ், ஸத்யஹிதர் முறையே தங்கள் பிதாவிடததிலிருந்து அதை அப்யஸித்தார்கள். தேவமித்ரன் என்ற சாகல்யரும், ரதந்தரும், பரத்வாஜரென்ற பெயருள்ள பாஷ்கலியும் ஸத்யஸ்ரீயினுடைய சிஷ்யர்கள். ஜனக மஹாராஜனுடைய யக்ஞஸதஸில் யாஞ்யவல்க்யருடன் சாஸ்த்ரவாதம் செய்து தோற்றுப்போய்த் தலைவெடித்திறந்தவர் இந்தச் சாகல்யர்தான்.—வாயுபுராணம்.) வேதமித்ரர் என்ற சாகல்யர் அந்த ஸம்ஹிதையை ஐந்து பாகங்களாகப் பிரித்து, முத்கலர், கோலகர், வாத்ஸ்யர், சாலீயர், சிசிரர் (முத்கலர், கோகலர், கபலீயர், வாத்ஸ்யர், சைசிரேயர்.—வாயுபுராணம்.) என்ற தனது சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். இந்த்ரப்ரமதியின் சிஷ்யரான சாக

பூர்ணி, அவருடைய ஸம்ஹிதையை மூன்று பாகங்களாகப் பிரித்து, வேத நிகண்டுவான நான்காவது பாகத்தையும் சேர்த்து, க்ரௌஞ்சர், வைதாலகி, வலாகர், நிருக்தக்ருத் (நேனவர், தாலகீ, சதவலாகர், நைகமர்—வாயுபுராணம்) என்ற தனது நான்கு சிஷ்யர்களுக்குமுபதேசித்தார். (ஸத்யஸ்ரீயினுடைய சிஷ்யரான ரதந்தராருக்குச் சாகபூர்ணியென்றும் பெயருண்டு—வாயுபுராணம்.) வேறொரு பாஷ்கலி வேறு மூன்று ஸம்ஹிதைகளைச் செய்து காலாயனி, கார்க்யர், கதாஜவர் என்ற தனது சிஷ்யர்களுக்குபதேசித்தார். (இவர் ஸத்யஸ்ரீயினுடைய சிஷ்யர்; சாகபூர்ணியின் ஸஹசிஷ்யர். நந்தாயநீயா, பன்னகாரி, ஆர்ஜவர், என்ற நாலவரும் பாஷ்கலியின் சிஷ்யர்கள்.—வாயு புராணம்)

வைசம்பாயனர் யஜுர்வேதத்தை இருபத்தேழு பாகங்களாகப் பிரித்து, ச்யாமாயனி, ஆருணி, ஆலம்பி முதலிய இருபத்தேழு சிஷ்யர்களுக்குபதேசித்தார்.

ஒருகாலத்தில் முனிகளெல்லோரும் சேர்ந்து, "மேருபர்வதத்தில் நடக்கும் ஸதஸிற்கு வராதவரினவர் ஏழுதினங்களுக்குள் ப்ரஹ்மஹத்யா தோஷத்தையடைவார்" என்று நியமித்தார்கள். அப்பொழுது வைசம்பாயனர் போகவில்லை; ஆகையால் அகஸ்மாத்தாய்த் தனது ஸஹோதரியின் குழந்தையைக் காலால் உதைக்க, அது இறந்து ப்ரஹ்மஹத்யாதோஷம் அவரைப் பிடித்துக்கொண்டது. உடனே தனது சிஷ்யர்களைப் பார்த்து,

"இந்தப் பாபம் நீங்கும்படி ப்ராயச்சித்தம் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார்.

அவர்களில், பக்தியிலும் குருசுச்ரூஷையிலும் சிறந்த யாஞ்யவல்க்யர் "அல்பசக்தியுள்ள இந்த ப்ராஹ்மணர்களுடன் நான் எப்படிச் சேர்ந்து ப்ராயச்சித்தம் செய்வேன்?" என்றார்.

வைசம்பாயனர், "நீ இவர்களை வீணாக அவமதிக்கிறாய். என்னுடைய கட்டளையை மீறும் சிஷ்யனால் எனக்கென்ன ப்ரயோஜனம்?" என்றார்.

"ஸ்வாமி! நான் வாஸ்தவத்தைச் சொன்னேன். நான் தங்களிடத்தில் அத்யயனம் செய்ததுபோதும். இதோ அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று ரக்தத்தால் பூசப்பட்ட யஜுர் வேத மந்த்ரங்களைக் கக்கிவிட்டுப் போனார்.

பிறகு மற்ற சிஷ்யர்கள், தித்திரீ என்னும் பறவைகளின் ரூபத்துடன் அவைகளை உட்கொண்டார்கள். ஆகையால் அவை

களுக்குக் கிருஷ்ண (கறுப்பு) யஜுர்வேதமென்றும், தைத்திரீய சாகையென்றும் பெயர் வந்தது. அப்பொழுது, யாஞ்யவல்க்யர் ஸூர்யபகவானை ஸ்தோத்ரம்செய்து, வைசம்பாயனருக்குந் தெரியாத யஜுர்வேத பாகங்களை அவருடைய அநுக்ரஹத்தால் பெற்றார். ஆகையால் அவைகளுக்கு அயாதயாமமென்றும், ஸூர்யன் அச்வரூபமாய் அவைகளை உபதேசித்தபடியால் வாஜஸனேயமென்றும், சுக்லயஜுர்வேதமென்றும் பெயராயிற்று.

யாஞ்யவல்க்யருடைய சிஷ்யர்களான (கண்வர், வைதேயர், சாலி, மத்யந்தினர், ஸபேயி, விதக்த்யர், உத்தாலி, தாம்ராயணி, வாத்ஸ்யர், காலவர், சைசிரி, ஆடவ்யர், பர்ணர், வீரணர், ஸம்பராயணர்.—வாயுபுராணம்.) பதினைந்து பெயர்களும் இதை 101 பாகங்களாகப் பிரித்தார்கள்.

ஜைமினியென்பவர் ஸுமந்துவென்ற தனது புத்ரனுக்கும், ஸுகர்மன் என்ற தனது பேரனுக்கும் ஸாமவேதத்தையுபதேசித்தார். ஸுகர்மன் அதை ஆயிரம் சாகைகளாகப்பிரித்து, ஹிரண்யநாபர், பௌஷ்யிஞ்சி என்ற தனது இரண்டு சிஷ்யர்களுக்குபதேசித்தார். (ஸுகர்மன் முதலில் ஆயிரம் சிஷ்யர்களுக்குபதேசித்தார். அவர்கள் அத்யயநம்செய்யக்கூடாததினத்தில் அத்யயநம் செய்ததால் இந்த்ரனால் கொல்லப்பட்டார்கள்.—வாயுபுராணம்)

ஸுமந்து என்பவர் அதர்வவேதத்தைக் கபந்தரென்ற தனது சிஷ்யருக்குபதேசித்தார். அவர் அதை இரண்டாகப்பிரித்துத் தேவதர்சர், பத்யர் என்ற தனது இரண்டு சிஷ்யர்களுக்குபதேசித்தார். தேவதர்சருடைய சிஷ்யர்கள், மௌத்கர், ப்ரஹ்மபலி, சௌல்காயனி, பிப்பலாதர். பத்யருடைய சிஷ்யர்கள், ஜாஜலி, குமுதாதி, சௌனகர். சௌனகருடைய சிஷ்யர்கள், பப்ரு, ஸைந்தவாயனர். இவர்கள் முறையே வெவ்வேறு ஸம்ஹிதைகளையேற்படுத்தினார்கள்.—விஷ்ணுபுராணம். 3, 4, 5.

ஒவ்வொரு வேதத்திலும் நான்கு பாகங்களுண்டு. 1. ஸம்ஹிதை: யாகங்களிலும் மற்ற வைதிககர்மங்களிலும் உபயோகிக்கப்படும் மந்த்ரங்கள். 2. ப்ராஹ்மணம்: மந்த்ரங்களுக்கும் க்ரியைகளுக்கும் உள்ள ஸம்பந்தத்தையும், யக்ஞவிதிகளையும், உதாஹரண கதைகளையும், வேதாந்த அபிப்ராயங்களையும், ஸூக்ஷ்மமான உபதேசங்களையும், ப்ராயச்சித்தம், ஸ்தோத்ரம, பரம்பராகதைகள் முதலிய விஷயங்களையும் விவரிக்கும். 3. ஆரண்யகம்; அரண்யத்தில் வானப்ரஸ்தர்களும் ஸந்யாஸிகளும் படிக்கவேண்

டிய பாகங்கள். 4. உபநிஷத்கள்: ப்ரஹ்மவித்யையை யுபதேசிக்கும் பாகங்கள்.

ரிக்வேதம்.

ஸம்ஹிதை. 8 அஷ்டகங்களாயும், ஒவ்வொரு அஷ்டகம் 8 அத்யாயங்களாயும், ஒவ்வொரு அத்யாயம் 33 வர்க்கங்களாயும், ஒவ்வொரு வர்க்கம் 5 ச்லோகங்களாயும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதையே 10 மண்டலங்களாயும், 85 அநுவாகங்களாயும், 1,017 ஸூக்தங்களாயும், 10,580 ரிக்குகளாயும் பிரிப்பதுமுண்டு. முதலாவது பிரிவு காத்யாயனருடைய அநுக்ரமணியில் காணப்படும். இரண்டாவதுபிரிவு ஐதரேய ஆரண்யத்திலும், ஆச்வலாயனர், சாங்காயனர்களுடைய க்ருஹ்யஸூத்ரங்களிலும், ப்ராதிசாக்யத்திலும், யாஸ்கருடைய நிருக்தத்திலும் காணப்படுகின்றது.

மண்டலங்கள் 1, 10ல் அநேக ரிஷிகளாலும்; 2-ல் க்ருத்ஸமதராலும்; 3-ல் விச்வாமித்ரராலும்; 4-ல் வாமதேவராலும்; 5-ல் அத்ரியாலும்; 6-ல் பரத்வாஜராலும்; 7-ல் வஸிஷ்டராலும்; 8-ல் கண்வராலும்; 9-ல் அங்கிரஸாலும் பார்க்கப்பட்ட ஸூக்தங்கள் காணப்படுகின்றன.

ரிக்வேதத்திற்கு நிகண்டுகளும் யாஸ்கருடைய நிருக்தமும் ஏற்பட்டிருக்கின்றன. ரிக்வேத ஸம்ஹிதைக்கு ஸாயனாசார்யர் பாஷ்யம் செய்திருக்கிறார். இந்தவேதம் அக்னியில் ஆஹுதி செய்யும் ஹோதா உச்சரிக்கவேண்டிய பாகம்.

ப்ராஹ்மணம். 40 அத்யாயங்களடங்கிய ஐதரேயப்ராஹ்மணமும், 30 அத்யாயங்களடங்கிய சாங்காயன அல்லது கௌஷீதகிப்ராஹ்மணமும் இதைச்சேர்ந்தவை. முதலாவது ப்ராஹ்மணம், ஸோமயாகங்கள், அக்னிஹோத்ரம், ராஜப்பட்டாபிஷேகம் முதலிய க்ரியைகளையும்; இரண்டாவது ப்ராஹ்மணம், ஸோமயாகங்களையும் விவரிக்கின்றன. ஐதரேயப்ராஹ்மணத்திற்கு ஸாயனரும், கௌஷீதகிப்ராஹ்மணத்திற்கு விநாயகரும் பாஷ்யங்கள் செய்திருக்கிறார்கள்.

ஆரண்யகம். 5 பாகங்களடங்கிய ஐதரேய ஆரண்யகம், 3 பாகங்களடங்கிய கௌஷீதகிஆரண்யகம்; இவ்விரண்டிற்கும் சங்கராசார்யர் வ்யாக்யானம் செய்திருக்கிறார்.

உபநிஷத். ஐதரேய, கௌஷீதகிப்ராஹ்மண, நாதபிந்து, ஆத்மபோத, நிர்வாண, முத்கல, அக்ஷமாலிகா, திரிபுர, ஸௌபாக்யலக்ஷ்மீ, ஸாஸ்வதீரஹஸ்ய, பஹ்வ்ருச என்ற 11.

ஸூத்ரம். 18 அத்யாயங்களுள்ள ஸாங்காயனச்ரௌதஸூத்ரம்; 12 அத்யாயங்களுள்ள ஆச்வலாயனச்ரௌதஸூத்ரம். இவை யாகங்களைப்பற்றின ப்ரயோகக்ரந்தங்கள். மேலும், ஆச்வலாயனர், சாங்காயனர், சௌனகர் என்றவர்களால் செய்யப்பட்ட கிருஹ்யஸூத்ரங்களுமுண்டு. சௌனகர் ரிக்வேத ஸம்ஹிதைக்கு ஒரு ப்ராதிசாக்யஸூத்ரம் செய்திருக்கிறார். (ப்ராதிசாக்யமென்பது சப்தங்களை ஸரியாக உச்சரிக்கும விதிகளை ஏற்படுத்தும் சாஸ்த்ரம்.) ரிகவேதத்தின சிக்ஷையைபபற்றிப் பாணினி முதலியவர்களும், சந்தஸைப்பற்றிப் பிங்கலரும் செய்த ஸூத்ரங்களும்: ஒவ்வொரு மந்த்ரத்தின் கர்த்தா, தேவதை, சந்தஸ் முதலிய விஷயங்களைத் தெரிவிக்கும் சௌனகருடைய அநுவாகாநுக்ரமணியும், காத்யாயனருடைய ஸர்வாநுக்ரமணியுமுண்டு.

யஜுர்வேதம்.

இது கிருஷ்ணயஜுர்வேதம் (தைத்ரீயஸம்ஹிதை), சுக்லயஜுர்வேதம் (வாஜஸநேயஸம்ஹிதை) என்று இருவகை. இதில் பாதிமந்த்ரங்கள் ரிக்வேதத்திலுளளவை. இது யாகங்களில் தேவதைகளைக் கூபபிடுதல, தேவதைகளை ஸ்தோத்ரஞ்செய்தல், அக்னிகுண்டம, செங்கல், யூபஸ்தம்பம முதலிய விஷயங்களையும், ராஜஸூயம் அசவமேதம முதலிய யாகங்களையும், ஔபாஸனம் அக்னிஹோத்ரம முதலிய கிருஹகிருத்யங்களையும் விவரிக்கின்றது. இது யாகத்தை நடத்துகிற அத்வர்யுவுககு உபயோகம்.

கிருஷ்ணயஜுர்வேதம்.

ஸம்ஹிதை. ஆபஸ்தம்பரால் ஏற்படுத்தபபட்ட தைத்திரீய சாகை; சாராயணீயர்களால் ஏற்படுததப்பட்ட காடகசாகை; ஔகியர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆத்ரேய சாகை என மூன்று வகை. ஆபஸ்தம்பசாகை 7 காண்டங்கள், 44 ப்ரச்னங்கள், 651 அநுவாகங்கள், 2,198 கண்டிகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது (ஒரு கண்டிகைக்கு ஸுமார் 50 வார்த்தைகள்). காடகசாகை 5 பாகங்களாயும், அவற்றில் முதல் 3-ம் 40 ஸ்தானகங்களாயும் பிரிக்கப்பட்டிருககின்றன. 4-வது, ஹோதாவால் சொல்லப்பட வேண்டிய ரிக்குகளையும், 5-வது, அச்வமேதயாகத்தில் உச்சரிக்கப்படும மந்த்ரங்களையும் தெரிவிககின்றன.

தைத்திரீயஸம்ஹிதைக்கு ஸாயணாசார்யர், பாலகிருஷ்ணர், பட்டகௌசிகபாஸ்கரமிச்ரர், பாவஸ்வாமி முதலியவர்கள் வ்யாக்யானஞ் செய்திருககிறார்கள்.

ப்ராஹ்மணம். தைத்திரீயப்ராஹ்மணம்.

ஆரண்யகம். தைத்திரீயஆரண்யகம்.

உபநிஷத். கட, தைத்திரீய, அதர்வசிகா, அதர்வசிர, ப்ரஹ்ம, கைவல்ய, ச்வேதாச்வதர, கர்ப்ப, அமிருதபிந்து, நாராயண, அமிருதநாத, காலாக்னிருத்ர, க்ஷுரிக, ஸர்வஸார, சுகரஹஸ்ய, தேஜோபிந்து, ப்ரஹ்மவித்யா, யோகதத்வ, த்ரிசிகிப்ராஹ்மண, தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்த, சாரீரக, யோகசிகா, ஏகாக்ஷர, அக்ஷி, அத்யாத்ம, அவதூத, கட, ருத்ரஹிருதய, யோககுண்டலி, பஞ்சப்ரஹ்ம, ப்ராணாக்னிஹோத்ர, வராஹ, சாட்யாயனீய, கலிஸந்தாரண என்று 35.

ச்ரௌதஸூத்ரம். போதாயன, பாரத்வாஜ, ஆபஸ்தம்ப, ஹிரண்யகேசி முதலியவர்களால் செய்யப்பட்டவை.

சுக்லயஜுர்வேதம்.

ஸம்ஹிதை. இது கண்வசாகை, மாத்யந்தினசாகை என இருவகை. வாஜஸநேய ஸம்ஹிதை 40 அத்யாயங்களாயும், 303 அனுவாகங்களாயும், 1,975 கண்டிகைகளாயும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதல் 25 அத்யாயங்கள் யாகயக்ஞங்களைப்பற்றிச் சொல்லுகின்றன. முதலாவது, இரண்டாவது அத்யாயங்களில அமாவாஸ்யை, பூர்ணிமைகளில் செய்யவேண்டிய யாகங்களும; 3-வதில அக்னிஹோத்ரமும், சாதுர்மாஸ்ய யாகங்களும்; 4-முதல் 8 வரையில் அக்னிஷ்டோமமும; 9, 10-ல் வாஜபேயமும், ராஜஸூயமும்; 11 முதல் 18 வரையில அக்னிகுண்டங்கள் கட்டும் முறையையும; 19 முதல் 21வரையில் ஸௌத்ராமணி யாகமும்; 22 முதல் 25 வரையில் அச்வமேதயாகமும்; 26 முதல 30 வரையில் மேற்கண்ட யாகமந்த்ரங்களும்; 30 முதல் 40 வரையில புருஷமேதம், ஸர்வமேதம், பிதிருமேதம், ப்ராவாக்யம் முதலியவைகளும; 40-வதில் ப்ரஹ்மவித்யையையும் விவரிக்கப்படுகின்றன. இதில் 16-வது அத்யாயம் சதருத்ரீயமென்றும், 31-வது புருஷஸூக்தமென்றும், 40-வது ஈசாவாஸ்ய உபநிஷத் என்றும் வழங்குகின்றன.

இதற்கு மஹீதார், உவடாசார்யா, மாதவர் என்றவர்கள் பாஷ்யங்கள் செய்திருக்கிறார்கள்.

ப்ராஹ்மணம். சதபதப்ராஹ்மணம். இது நூறு அத்யாயங்களுள்ளது. இதின் 14-வது காண்டம் 2-வது பாகம் பிருஹதாரண்யகமென்றும் சொல்லப்படும்.

உபநிஷத். ஈசாவாஸ்ய, பிருஹதாரண்யக, ஜாபால, ஹம்ஸ, பரமஹம்ஸ, ஸுபால, மந்த்ரிக, நிராலம்ப, மண்டலப்ராஹ்மண, அத்வயதாரக, பைங்கள, பிக்ஷுக, துரீயாதீதஅவதூத, தாரஸார, யாஜ்ஞவல்க்ய, முக்திக என்ற 16.

ஸூத்ரம். காத்யாயனர், வைஜவாபர் என்றவர்களின் ச்ரௌதஸூத்ரமும்; பாரஸ்கரக்ருஹ்யஸூத்ரமும்; காத்யாயனருடைய ப்ராதிசாக்யஸூத்ரமும உண்டு. க்ருஷ்ணயஜுர்வேதத்திற்கு, ஆத்ரேயசாகை காடகசாகைகளைசசேர்ந்த இரண்டு அனுக்ரமணிகளும், சுக்லயஜுர்வேதத்திற்குக் காத்யாயனருடைய அனுக்ரமணியுமுண்டு.

ஸாமவேதம்.

ஸம்ஹிதை. இதில் முதல்பாகம் 6 ப்ரபாடகங்களாகவும், இரண்டாவது 9 ப்ரபாடகங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதில் அடங்கிய ரிக்குகள் 1,549; இவைகளில் 78-ஐத்தவிர மற்றவை ரிக்வேதத்தில் அடங்கியவை. ஸோமயாகத்தில் ஆஹுதி செய்யும்பொழுது இந்தவேதத்தை உத்காதாகானஞ்செய்யவேண்டியது. இவைகளுக்கேக்ராமகேயகானம், ஆரண்யகானம், ஊஹகானம், ஊஹ்யகானம் என்ற வேறுபிரிவுமுண்டு.

ப்ராஹ்மணம். தாண்டயம, ஷட்விம்சம், அத்புதம, சாந்தோகயம், ஸாமவிதி, ஆர்ஷேயம், தேவதாத்யாயம், உபநிஷத், ஸம்ஹிதோபநிஷத், வம்சம் முதலியவை.

உபநிஷத். கேன, சாந்தோக்ய, கூடாருணிக, மைத்ராயணி, மைத்ரேய, வஜ்ரஸூசி, த்யானபிந்து, யோகசூடாமணி, வாஸுதேவ, மஹா, ஸந்யாஸ, அவ்யக்த, குண்டிகா, ஸாவித்ரி, ருத்ராக்ஷஜாபால, தர்சன, ஜாபாலி என்ற 17.

ஸூத்ரம். மாசகர், லாட்யாயனர், த்ராஹ்யாயனர் முதலியவர்கள் செய்த ச்ரௌதஸூத்ரங்களும்; அனுபதஸூத்ரம், நிதானஸூத்ரம், புஷ்பஸூத்ரம், பஞ்சவிதிஸூத்ரம், காத்யாயனருடைய ப்ரதிஹாரஸூத்ர, தண்டாலக்ஷணஸூத்ரம், உபக்ரந்தஸூத்ரம், கல்பானுபாதம், அனுஸ்தோத்ரம், க்ஷுத்ரம் முதலிய ச்ரௌதஸூத்ரங்களும்; கோபிலர், காதிரர், த்ராஹ்யாயனர், கௌதமர் என்றவர்களுடைய க்ருஹ்யஸூத்ரங்களும், காத்யாயனருடைய கர்மப்ரதீபமும் உண்டு.

அதர்வவேதம்.

ஸம்ஹிதை. இது 20 காண்டங்கள், 38 ப்ரபாடகங்கள், 760 ஸூக்தங்கள், 6,000 மந்த்ரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஸாயனருடைய பாஷ்யமுண்டு.

ப்ராஹ்மணம். கோபதப்ராஹ்மணம்.

உபநிஷத். ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய, பஞ்சருத்ர, பிருஹத்ஜாபால, நிருஸிம்ஹதாபினி, நாரதபரிவ்ராஜக, ஸீதா, சரப, மஹாநாராயண, ராமரஹஸ்ய, ராமதாபினி, சாண்டில்ய, பரமஹம்ஸபரிவ்ராஜக, அன்னபூர்ண, ஸூர்ய, ஆத்மா, பாசுபத ப்ரஹ்ம, த்ரிபுராதாபினி, தேவீ, பாவன, பஸ்மஜாபால, கணபதி, மஹாவாக்ய, கோபாலதாபினி, கிருஷ்ண, ஹயக்ரீவ, தத்தாத்ரேய, காருட என்ற 30.

ஸூத்ரம். சௌனகருடைய சதுர் அத்யாயிகா என்ற ப்ராதிசாக்யஸூத்ரமும், வைதானருடைய ச்ரௌதஸூத்ரமும், கௌசிகருடைய கிருஹ்யஸூத்ரமும்; அதைச்சேர்ந்த நக்ஷத்ர கல்பம், சாந்திகல்பம், விதானகல்பம், ஸம்ஹிதாகல்பம், அபிசாரகல்பம் என்றவைகளும் உண்டு.

யாகத்தில் எல்லா க்ரியைகளும் பிசகாமல் நடக்கும்படி கவனிக்கிற ப்ரஹ்மாவுக்கு அதர்வவேதம் உபயோகமானது. (பதஞ்சலி மஹாபாஷ்யத்தில் ரிக்வேதம் 21, யஜுர்வேதம் 100, ஸாமவேதம் 1,000 அதர்வவேதம் 9 சாகைகளாகவும்; முக்திகோபநிஷத்தில் யஜுர்வேதம் 150, அதர்வவேதம் 50 சாகைகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது.)

௸ வரி. சாஸ்த்ரங்களையும் :—**வேதாங்கம்.** சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பமென்று வேதாங்கம் அறுவகைப்படும். அவற்றுள் :

1. **சிக்ஷை.** இதற்குப் பாணினி கர்த்தா. இதில் வேதசப்தங்களினுடைய அக்ஷரங்களின் ஸ்தானஞானமும், உதாத்தாநுதாத்த ஸ்வரிதஸ்வரங்களின் ஞானமும் சொல்லப்படும். வ்யாஸர், பரத்வாஜர், நாரதர் என்றவர்கள் செய்த சிக்ஷைகளுமுண்டு.

2. **வ்யாகரணம்.** இதற்குப் பாணினி கர்த்தா. காத்யாயனரும், பதஞ்சலியும் வ்யாக்யானங்களை யெழுதியிருக்கிறார்கள். இதில் வேதசப்தங்களின் பரக்ருதிப்ரத்யயஞானம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. பாணினி செய்த வ்யாகரணத்தைத் தவிரப் பிறவ்யாகரணங்கள் வேதாங்கமாக அங்கீகரிக்கப்படமாட்டாது. அவை புராணங்களுக்குபயோகப்படும்.

3. **சந்தஸ்.** இதற்குப் பிங்களமுனி கர்த்தா. வேதத்தில சொல்லப்பட்ட காயத்ரி முதலிய சந்தஸுக்களின் ஞானத்தை உபதேசிக்கும்.

4. **நிருக்தம்.** இதற்கு யாஸ்கமுனிகர்த்தா. இதில் வேத மந்த்ரங்களின் ப்ரயோஜனத்தை விளக்கும்பொருட்டு ப்ரஸித்தியில்லாத பதங்களுடைய அர்த்தங்களும், வேத சப்தங்களுக்கு நிகண்டுவும் அடங்கியிருக்கின்றன. சாகபூர்ணி என்பவரும் நிருக்தம் செய்திருக்கிறார். இது பதகாண்டம, அர்த்தகாண்டமென்று இருவகையாய் விளங்கும்.

5. **ஜ்யோதிஷம்.** இதற்கு ஆதித்யன் முதலானோர் கர்த்தாக்கள். இதில் வைதிககர்மங்களைத் தொடங்கவேண்டிய காலஞானமும், பலமும், வருங்கால நடக்கைகளும் விவரிக்கப்படும். ஸூர்யஸித்தாந்தமுதலிய ஜ்யோதிஷநூல்கள் கணக்கற்றவை.

6. **கல்பம்.** இதற்கு ஆச்வலாயனர், காத்யாயனர், ஆபஸ்தம்பர், போதாயனர், த்ராஹ்யாயனர், பரத்வாஜர், சத்யாஷாடர், வைகானஸர, ஹிரண்யகேசி முதலானோர் கர்த்தாக்கள். கல்ப ஸூத்ரங்கள் வேதங்களில் உபதேசிக்கப்பட்ட யக்ஞகர்மங்களை யனுஷ்டிக்கும் முறையைப்போதிக்கும்.

வரி 9. **ஸாதனங்களை :** 1. நித்யாநித்யவஸ்து விவேகம் :— ப்ரஹ்மமே நித்யம், ஜகத் அநித்யமென்று ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணாதிகளாலும், குருவினுபதேசத்தாலும் தெரிந்து கொள்வது.

2. இஹாமுத்ரார்த்தபலபோகவிராகம் :—இந்த லோகத்தில் அநுபவிக்கிற ஸகல விஷயஸுகங்களிலும், ப்ரஹ்மலோகம் வரையில் இதரலோகங்களிலநுபவிக்கும் ஆனந்தங்களிலும், வாந்தி செய்த அன்னம், மலம், மூத்ரம் முதலியவைகளில்போல வெறுப்படைவது.

3 சமாதிஷட்கஸம்பத்தி : **சமம்**—கர்மேந்த்ரியங்களுடைய வ்யவஹாரங்களையடக்குதல். **தமம்**—ஞானேந்த்ரியங்களுடைய வ்யவஹாரங்களையடக்குதல். **உபரதி**.—விஷயங்களில் பற்றுதலை யொழிப்பது. **திதிக்ஷை**—ப்ராரப்தத்தாலுண்டாகும் ஸுகதுக்கங்களைப்பொறுப்பது. **ஸமாதானம்**—ச்ரவணம் முதலியவைகளால் அறிந்துகொள்ளப்பட்ட வஸ்துவில் மனஸை நிறுத்துவது. **ச்ரத்தை**—குருவாக்யத்திலும், வேதாந்தவாக்யத்திலும் விச்வாஸத்தை வைப்பது.

4. முமுக்ஷுத்வம் :—வீடுபற்றியெரியும்போது அதற்குள் ளகப்பட்டுக்கொண்ட மனிதன், தனது மனைவி மக்கள் தனம் தான்

யும் முதலியவைகளைக்கவனியாமல் விட்டுவிட்டுத் தன்னைக்காப் பாற்றுவதிலேயே முயற்சியுள்ளவனாய், வீட்டிற்கு வெளியிலோ டித் தாபத்தை நிவர்த்திசெய்துகொள்ள விரும்புவதுபோல, ஸம ஸாரதாபத்ரயமாகிற அக்னியால் தகிக்கப்பட்டுத் துக்கஸம்பந்த மில்லாத நித்யமான ஆனந்தத்தை அநுபவிக்க உண்டாகும் தீவ்ர மான ஆசை.

வரி 10. வர்ணாச்ரம தர்மங்களை:—ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரனென்று வர்ணங்கள் நான்கு. ப்ராஹ்மணன் நான்குவர்ணத்து ஸ்த்ரீகளையும்; க்ஷத்ரியன் ப்ராஹ்மணனைத் தவிர மற்றமூன்றுவர்ணஸ்த்ரீகளையும்; வைச்யன், வைச்ய சூத்ர ஸ்த்ரீகளையும்; சூத்ரன் சூத்ரஸ்த்ரீகளையும் விவாஹம் செய்ய லாம்.

ப்ராஹ்மணன்	+ ப்ராஹ்மணஸ்த்ரீ		=	ப்ராஹ்மணன்.
,,	+ க்ஷத்ரிய	,,	=	...
,,	+ வைச்ய	,,	=	அம்பஷ்டன்.
,,	+ சூத்ர	,,	=	நிஷாதன் அல்லது பாரசவன.
,,	+ உக்ர	,,	=	ஆவிருதன்.
,,	+ அம்பஷ்ட	,,	=	ஆபீரன்.
,,	+ ஆயோகவ	,,	=	திக்வணன்.
க்ஷத்ரியன்	+ க்ஷத்ரிய	,,	=	க்ஷத்ரியன்.
,,	+ ப்ராஹ்மண	,,	=	ஸூதன்.
,,	+ வைச்ய	,,	=	...
,,	+ சூத்ர	,,	=	உக்ரன்.
வைச்யன்	+ வைச்ய	,,	=	வைச்யன்.
,,	+ ப்ராஹ்மண	,,	=	வைதேஹன்.
,,	+ க்ஷத்ரிய	,,	=	மாகதன்.
,,	+ சூத்ர	,,	=	...
சூத்ரன்	+ சூத்ர		=	சூத்ரன்.
,,	+ ப்ராஹ்மண	,,	=	சண்டாளன்.
,,	+ க்ஷத்ரிய	,,	=	க்ஷத்தா.
,,	+ வைச்ய	,,	=	அயோகவன்.
,,	+ நிஷாத	,,	=	குக்குடகன்.
நிஷாதன்	+ சூத்ர	,,	=	புல்கஸன்.
க்ஷத்தா	+ உக்ர	,,	=	ச்வபாகன்.
வைதேஹன்	+ அம்பஷ்ட	,,	=	வேணன்.

ப்ராஹ்மண வ்ராத்யன்	+ ப்ராஹ்மண ,,	= பூர்ஜகண்டகன், ஆவந்த்யன், வாடதானன், புஷ்பதன், சைகன்.
க்ஷத்ரிய வ்ராத்யன்	+ க்ஷத்ரிய ,,	= சல்லன், மல்லன், நிச்சிவி, நடன்.
வைச்யவ்ராத்யன்	+ வைச்ய ,,	= ஸூதன்வாசார்யன், காரூசன், விஜன்மா, மைத்ரன், ஸாத்வதன்.

ப்ராஹ்மணனுக்கு மூன்று ஜாதிஸ்த்ரீகளிடத்திலும், க்ஷத்ரியனுக்கு மற்ற இரண்டு ஜாதிஸ்த்ரீகளிடத்திலும், வைச்யனுக்கு சூத்ரஸ்திரீயினிடத்திலும் பிறக்கும் பிள்ளைகள் தன் ஜாதிஸ்திரீயினிடம் பிறக்கும் பிள்ளைகளைவிடக் கீழானவர்கள். இவர்களே அநுலோமர்கள்.

ஸூதன், வைதேஹன், மாகதன், அயோகவன், க்ஷத்தா, சண்டாளன் என்றவர்கள் ஸங்கரஜாதிகள்.

ஆவ்ருதன், ஆபீரன், திக்வணன், புல்கஸன், குக்குடகன், ச்வபாகன், வேணன், பூர்ஜகண்டகன், நடன், காரூசன் இவர்கள் ப்ரதிலோமர்கள்.

தஸ்யூ என்றவன் அயோகவஜாதிஸ்த்ரீயிடத்தில் ஸைரிந்த்ரியனை உண்டுபண்ணுகிறான். இவனுக்கு எண்ணெயிடுதல், கைகால் பிடித்தல், வலைத்தொழில் ஜீவனோபாயங்கள். வைதேஹனுக்கு அயோகவஸ்த்ரீயினிடத்தில் பிறந்தவன் **மைத்ரேயன்** (குடுகுடுப்பாண்டி). இவன் விடியற்காலத்தில் மணியடித்துக்கொண்டு எல்லாரையும் ஸ்தோத்ரஞ்செய்து பிக்ஷையெடுத்துப் பிழைக்கிறான். நிஷாதனுக்கு அயோகவஸ்த்ரீயினிடத்தில் பிறந்தவன் **மார்க்கவன்** (செம்படவன்). இவனுக்கு ஓடம்விடுகிறது தொழில். மேற்சொன்ன மூவரும் பிணத்தின் வஸ்த்ரத்தையுடுத்துக்கொண்டு, எச்சிலன்னத்தைத் தின்கிறார்கள். நிஷாதனுக்கு வைதேஹஜாதிஸ்த்ரீயிடத்தில் **காராவரன்** (சக்கிலியன்) உண்டாகிறான். சண்டாளனுக்கு வைதேஹஸ்த்ரீயிடத்தில் **பாண்டுஸோபாகன்** (குறவன்) பிறக்கிறான். இவனுக்கு மூங்கில்வேலை செய்வது தொழில். நிஷாதனுக்கு வைதேஹஸ்த்ரீயிடத்தில் **ஆஹிண்டிகன்** பிறக்கிறான். இவனுக்குக் குற்றவாளிகளையடித்தல், கட்டுதல், கொலைசெய்தல் இவைகளைச் செய்யுமிடத்தில் காவலிருத்தல் தொழில். சண்டாளனுக்குப் புல்கஸஜாதியில் **ஸோபாகன்** பிறக்கிறான். அவனுக்கு அரசனுடைய உத்திரவுப்படி கொலைசெய்யத்தக்கவர்களைக் கொலைசெய்வது தொழில். அவன் பெரியோர்களால் நிந்திக்கப்பட்ட மஹாபாபி. சண்டாளனுக்கு நிஷாதஸ்த்ரீயினிடத்

தில் அந்த்யாவஸாயி என்றவன் பிறக்கிறான். இவனுக்குச் சண்டாளனுடைய தொழிலைவிட ஹீனமான சுடுகாட்டைக் காப்பது தொழில்.

ஸூதஜாதியாருக்குத் தேரோட்டுவதும்; அம்பஷ்டஜாதியாருக்கு ரணவைத்யம் செய்வதும்; வைதேஹஜாதியாருக்கு அந்தப்புரத்தில் காவலிருப்பதும்; மாகதஜாதியாருக்கு ஸமுத்ரத்திலும் கரையிலும் வர்த்தகஞ்செய்வதும்; நிஷாதனுக்கு மீன் பிடிப்பதும்; அயோகவனுக்கு தச்சுவேலையும்; மேதன், ஆந்த்ரன், சுஞ்சு, மத்கு இவர்களுக்குக் காட்டிலிருக்கும் மிருகங்களைக் கொன்று விற்பதும்; க்ஷத்தா, உக்ரன், புல்கஸன் இவர்களுக்கு வளையிலிருக்கும் எலி உடும்பு முதலிய ஜந்துக்களைப் பிடிப்பதும்; திக்வணனுக்குத் தோல்வர்த்தகஞ்செய்வதும்; வேணனுக்குத் தாளம் முதலிய வாத்யங்களை வாசிப்பதும் தொழில்கள். இவர்கள், பட்டணத்திற்கும் ஊருக்கும் வெளியில் மரத்தடி, தோப்பு, ச்மசானத்திற்கு ஸமீபமான இடம், மலை, பூந்தோட்டம் இவைகளில் எல்லாருக்கும் இவன் இன்ன தொழிலாளியென்று தெரியும்படி தங்கள் தொழிலைச்செய்துகொண்டு வஸிக்கவேண்டியது. சண்டாளனுக்கும், ச்வபாகனுக்கும் ஊருக்கு வெளியில் வீடிருக்கவேண்டியது. அவர்களுக்கு இரும்பு பாத்ரம் கூடாது. அவர்கள் தொட்டபாத்ரங்களுக்குச் சுத்தி கிடையாது. அவர்கள் மாடு முதலியவைகளை வைத்துக்கொள்ளக்கூடாது. நாயையும் கழுதையையும் வளர்க்கவேண்டியது. பிணத்தின் வஸ்த்ரங்களையுடுக்கவேண்டும். இரும்பு, பித்தளை முதலியவைகளாற் செய்யப்பட்ட ஆபரணங்களைத்தரிக்கவேண்டியது. உடைந்த சட்டியில் புஜிக்கவேண்டியது. அவர்கள் எப்போதும் தொழிலுக்காகத் திரிந்துகொண்டிருக்கவேண்டும். தர்மகார்யம் செய்கிற ஸமயத்தில் அவர்களைப்பார்க்கவும் பேசவுங்கூடாது. அவர்கள் தங்கள் ஜாதியிலேயே, கடன் வாங்குவது, ஸம்பந்தம்செய்வது முதலியவைகளைச் செய்யவேண்டும். அவர்களுக்கு நேரே அன்னம்போடக்கூடாது. வேலைக்காரர்களைக்கொண்டு உடைந்த பாத்ரங்களில் அன்னம்போடவேண்டும். அவர்கள் ஊரிலும் பட்டணங்களிலும் இரவில் ஸஞ்சரிக்கக்கூடாது. பகலில் க்ராமத்திலும் ஊரிலும் விற்கவும் வாங்கவுங்கூடாது. அவர்களுக்கு அரசன் கொடுத்த அடையாளத்தோடு ஸஞ்சரிக்கவேண்டியது. பந்துக்களில்லாமல் இறந்துபோனவர்களுடைய ப்ரேதங்களையெடுக்கவேண்டியது. அரசன் உத்திரவின்படி கொலைசெய்யத்தக்கவர்களைக்கொன்று அவர்களுடைய வஸ்த்ரம், படுக்கை, ஆபரணங்களை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ப்ராஹ்மணன் விவாஹம்செய்துகொண்ட சூத்ரஸ்த்ரீயினிடத்தில் பிறந்த பெண், ப்ராஹ்மணனை விவாஹஞ்செய்துகொண்டு, அவளுக்கும் பெண்ணாகவேபிறந்து, இவ்விதமாக ஏழு தலைமுறைகள் வரையில் ப்ராஹ்மணனையே விவாஹம்செய்துகொண்டுவந்தால், ஏழாவது தலைமுறையில் பிறந்தவர்கள் ப்ராஹ்மணர்களாகிறார்கள். ஆனால் சூத்ரஸ்த்ரீயினிடத்தில் ப்ராஹ்மணனுக்குப் பிறந்த புருஷன் சூத்ரத்தன்மையையடைகிறான். க்ஷத்ரியனுக்குச சூத்ரஸ்த்ரீயிடத்தில பிறந்த பெண்ஸந்ததி க்ஷத்ரியனையே விவாஹம் செய்துகொண்டுவந்தால், ஐந்தாவது தலைமுறையில் க்ஷத்ரியத்தன்மையையடையும், வைச்யனுக்குச் சூத்ரஸ்த்ரீயினிடத்தில் பிறந்த பெண்ஸந்ததி மூன்று தலைமுறைகள் வரையில் வைச்யனையே விவாஹம் செய்துகொண்டுவந்தால் வைச்யத்தன்மையையடையும்.

வர்ண தர்மம்.

வேதத்தையத்யயனம் செய்தல், செய்வித்தல், யக்ஞம் செய்தல், செய்வித்தல், தானம் கொடுத்தல், தானம் வாங்குதல் ஆகிய இவ்வாறு தொழில்களும் ப்ராஹ்மணனுக்குரியவை. ப்ரஜைகளைத் தர்மமாகக்காத்தல், தானங்கொடுத்தல், வேதமோதுதல், பாட்டுக் கூத்து ஸ்திரீ முதலிய விஷயங்களில் மனஸ் செல்லாமலிருத்தல், இவை நான்கும் க்ஷத்ரியனுக்குரியவை. பசுக்களைக் காப்பாற்றுதல், தானங்கொடுத்தல், வேதமோதுதல், ஜலத்திலும் பூமியிலுமுண்டான ரதனம், நெல் முதலியவைகளை வ்யாபாரம் செய்தல், வட்டி வாங்குதல், பயிரிடுதல் இவை வைச்யனுக்குரியவை. இந்த மூன்று வர்ணத்தாருக்கும் பொறாமையின்றிப் பணிவிடை செய்வது சூத்ரனுக்குரிய தர்மம்.—(மநுஸ்மிருதி. 1.)

* வைச்யன் உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களையடைந்து வேதமோதினபின், விவாஹஞ்செய்துகொண்டு, பசுக்களைக்காப்பாற்றுவது, பயிர் செய்வது முதலிய தொழில்களில் முயற்சியுள்ளவனாயிருக்கவேண்டியது. அவன் காப்பாற்றும்போது மற்றொரு ஜாதியாலும் பசுக்களைக்காப்பாற்றக்கூடாது. ரத்னம், முத்து, பவழம், இரும்பு முதலிய லோஹங்கள், வஸ்த்ரம், கற்பூரம் முதலிய வாஸனைத்ரவ்யங்கள், உப்பு முதலிய ரஸபதார்த்தங்களுக்கு அந்தந்தத் தேசத்திலுள்ள விலையின் ஏற்றக்குறைவையும், சரக்கின் ஸாராஸாரங்களையும், எல்லா விதைகளையும் விதைக்கிற முறைமையையும், விதைக்கவேண்டிய காலங்களையும், நிலங்களின் குணதோஷங்களையும், படி தராசு முதலியவைகளின் தத்

ரங்களையும், ஒரேமாதிரியான சரக்குகளின் நலம் இளப்பத்தையும், சரக்குகளுக்கு அந்தந்தத் தேசங்களிலிருக்கும் விலையையும், இந்தச் சரக்கை இவ்வளவு காலம் வைத்திருந்தால் இவ்வளவு லாபம் அல்லது நஷ்டம் வருமென்பதையும், இந்தத் தேசத்தில் புல் தண்ணீரிருப்பதால பசுக்கள் விருத்தியடையுமென்பதையும், பயிர்வேலை செய்பவர்களுக்கும் மாடுமேய்ப்பவர்களுக்கும் தேசகாலங்களுக்குத்தகுந்தபடி சம்பளங்கொடுப்பதையும், சரக்குகளை ஸமயம்பார்த்து வாங்குவதையும் விற்பதையும், நானாதேசங்களில் வழங்கும் பாஷைகளையும் வைச்யன் அறியவேண்டியது.

வேதசாஸ்த்ரங்களில் தேர்ந்து கீர்த்திபெற்ற கிருஹஸ்த ப்ராஹ்மணனுக்குச் சுச்ரூஷை செய்வதே சூத்ரனுக்கு மோக்ஷத்தைத்தருகிற மேலான தர்மம். உள்ளும்புறமும் பரிசுத்தனாய், உயர்ந்த ஜாதியார்களைக் கொடுமையாகப்பேசாமல், ப்ராஹ்மணனுக்கும், அவன் கிடைக்காவிட்டால் க்ஷத்ரியனுக்கும், அவன் கிடைக்காவிட்டால் வைச்யனுக்கும் பணிவிடை செய்துகொண்டு, அஹங்காரமில்லாமல் அடுத்திருக்கிற சூத்ரன் மேலான ஜாதியையடைகிறான்.—(மனுஸ்மிருதி. 9.)

ப்ராஹ்மக்ஞானநிஷ்டனையும், ப்ராஹ்மணஜாதி ஸ்த்ரீயினிடத்தில் பிறந்தவனையும், தன் காமததில் நிலைபெற்றவனையுமிருக்கிற ப்ராஹ்மணன் மேற்சொல்லப்போகிற ஆறு கர்மங்களினாலுஞ் ஜீவிக்கவேண்டியது. அவையாவன:—ஓதுவித்தல், ஓதல், யாகஞ்செய்தல், யாகஞ் செய்வித்தல், கொடுத்தல், வாங்குதல். அவற்றுள் ஓதுவித்தல், யாகஞ்செய்வித்தல், நல்லோரிடத்தில் தானம் வாங்குதல் இம்மூன்றும் அவனுக்கு ஜீவனோபாயங்களான தொழில்கள்.

ப்ராஹ்மணனுக்குச்சொல்லிய ஆறு கர்மங்களில க்ஷத்ரியனுக்கு ஓதுவித்தல், யாகஞ்செய்வித்தல், தானம்வாங்குதல் இம்மூன்று நீங்கலாக மற்றவையுரியவை.

வைச்யனுக்கு ஓதிவைத்தல் முதலிய மூன்றும் கிடையாது. ஏனென்றால், ப்ராஹ்மணனுக்கு ஜீவனவிர்த்தியாக விதித்த தொழில்களை இவ்விருவருக்கும் மனுப்ரஜாபதி விதிக்கவில்லை.

க்ஷத்ரியனுக்குக் கத்தி, பாணமுதலிய ஆயுதங்களைத் தரித்து உலகாள்வதும், வைச்யனுக்கு வர்த்தகஞ்செய்வதும், பசுவைக் காப்பதும், பயிரிடுவதும் ஜீவனோபாயமாம். மேற்சொல்லிய யாகஞ்செய்தலும், தானங்கொடுத்தலும், ஓதலும் தர்மோபாயமாம்.

ப்ராஹ்மணனுக்கு ஓதிவைத்தலும், க்ஷத்ரியனுக்கு உலகாள்வதும், வைச்யனுக்கு வர்த்தகஞ்செய்வதும் தொழில்களிற்சிறந்தவை. ப்ராஹ்மணனுக்கு மேற்சொல்லிய ப்ரகாரமாகத் தன் தொழிலினால் ஜீவிக்கக்கூடாத ஸமயத்தில் க்ராமாதிகாரம் தேசாதிகாரமுதலிய க்ஷத்ரியனுடைய தொழிலினால் ஜீவிக்கவேண்டியது. ஏனென்றால், அது அவனுக்கு அடுத்தஜாதியின் தொழிலல்லவா? தன் ஜாதித்தொழில் க்ஷத்ரியஜாதித்தொழிலிரண்டினாலும் ஜீவிக்கக்கூடாவிடில், வைச்யன் தொழிலான பயிரிடுதல், பசுவைக் காப்பாற்றல், வ்யாபாரஞ்செய்தல் இவைகளாலும் ஜீவிக்கலாம். ப்ராஹ்மணனும் க்ஷத்ரியனும் வைச்யன் தொழிலினால் ஜீவித்தபோதிலும், அதிக ஹிம்ஸையுள்ளதாயும், பிறருக்குக் கட்டுப்படவேண்டியுமிருக்கிற பயிரிடுதலை அகத்யம் நீக்கவேண்டியது. (அதைச் செய்யாவிட்டால் ஜீவனம் நடக்காத காலத்தில் அதையும் அந்யனைக்கொண்டு செய்விக்கவேண்டுமென்று கருத்து.) சிலர் பயிரிடுதலை நல்லதொழிலென்று நினைக்கிறார்கள்; அந்தப் பிழைப்பு பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது. ஏனெனில், இரும்பை முகத்திலேயுடைய கலப்பையும் மண்வெட்டியும் பூமியையும் பூமியிலுண்டான பல ஜந்துக்களையும் வெட்டுகின்றனவல்லவா? பிழைப்பில்லாததால் தந்தம்தொழிலைவிட்டு வைச்யன் தொழிலான வ்யாபாரத்தைச்செய்கிற ப்ராஹ்மணனும், க்ஷத்ரியனும் அடியிற்கண்டவை நீங்கலாக மற்றச்சரக்கை ஜீவனத்திற்கும் பொருளை விருத்திசெய்வதற்கும் விற்கலாம். ஸகலமான ரஸவஸ்துக்கள், சமைத்த அன்னம், எள்ளு, கெம்பு முதலிய கல், உப்பு, மனிதர், பசுக்கள் இவைகளை விற்கக்கூடாது. சிவந்த சாயமுள்ள நூல், வஸ்த்ரம், சிகப்பில்லாமற்போனாலும் சணப்பு, பட்டு, கம்பளம், பழம், கிழங்கு, மருந்து, ஜலம், ஆயுதம், விஷம், மாம்ஸம், ஆட்டாங்கொடி, கர்ப்பூரமுதலிய வாஸனாத்ரவ்யங்கள், பால், தேன், தயிர், எண்ணெய், மது, வெல்லம், தர்ப்பை, காட்டிலுண்டான யானை முதலான மிருகங்கள், ஸிம்ஹம், பக்ஷி, சாராயம், அவிரி, அரக்கு, குதிரை முதலிய வாஹனங்களையும் விற்கக்கூடாது. ஆனால் பயிரிடுகிற ப்ராஹ்மணனுக்கு எள்ளு விளைந்தால், அந்த எள்ளை வேறே தான்யத்திற்குப்பதிலாக மாற்றியாவது அல்லது ரோகவாவது அதிககாலம் வைத்திராமல், உடனே விற்றுத் தர்மகார்யத்தில் உபயோகஞ்செய்யவேண்டியது. எவன் புஜிப்பதிற்கும், எண்ணெயிட்டுக்கொள்வதிற்கும், தானஞ்செய்வதிற்கும் தவிர மற்றவிஷயங்களுக்கு எள்ளையுபயோகிக்கிறானோ அந்த ப்ராஹ்மணன் தன் பிதிருக்களுடன் நாயின் மலத்தில் புழு

வாகப்பிறக்கிறான். ப்ராஹ்மணன், மாம்ஸம் அரக்கு உப்பு விற்றால் உடனே பதிதனாவான். பால் விற்றால் மூன்று தினத்தில் சூத்ரனாவான். நிந்திக்கப்பட்ட மற்ற சரக்குகளைப் பொருளாசையால் விற்கிற ப்ராஹ்மணன் ஏழுதினத்தில் வைசயதன்மையையடைகிறான். தன்னிடத்திலிருக்கிற வெல்லம்முதலிய ரஸங்களை நெய் முதலிய ரஸங்களுக்குப்பதிலாக மாற்றிக்கொள்ளவேண்டியது. உப்பைமாத்ரம் வேறே சரக்கிற்குப்பதிலாக மாற்றிக்கொள்ளக்கூடாது. சமைத்த அன்னத்தை அரிசியினாலும், எள்ளை அதற்கு ஸரியான அரிசி முதலிய தான்யத்தாலும் மாற்றிக்கொள்ளவேண்டியது.

க்ஷத்ரியன், தனது ஜாதிவிருத்தியினாலும், ப்ராஹ்மணனுக்கு விதித்த வைச்யவிருத்தியினாலும் பிழைக்கக்கூடாதபோது, ரஸம் முதலிய வஸ்துக்களை வ்யாபாரஞ்செய்தாவது பிழைக்கலாமேயல்லது, எவ்வித ஆபத்திலும் தனக்குமேலான ஜாதியார்களின் தொழிலைச்செய்ய எண்ணங்கொள்ளக்கூடாது. தாழ்ந்த ஜாதியான், பொருளாசையால் தனக்கு மேலான ஜாதியார்களின் தொழிலைச்செய்தால், அவன் பொருள் முழுமையையும் அரசன் க்ரஹித்துக்கொண்டு, அவனையும் உடனே ஊரைவிட்டோட்டவேண்டியது. ஏறக்குறைய நடத்தினாலும் தன் ஜாதிதருமமே மேலானது. அந்யஜாதிதருமத்தை நன்றாயனுஷ்டித்தாலும் அது தாழ்ந்தது. வேறு ஜாதியின் தொழிலாற்பிழைக்கிறவன் உடனே தனது ஜாதியிலிருந்து பதிதனாவான்.

வைச்யன் தன் ஜாதித்தொழிலால் ஜீவிக்கக்கூடாத ஸமயத்தில் சூத்ரன் தொழிலினால் ஜீவிக்கலாம். ஆனால் செய்யக்கூடாத தான உச்சிஷ்ட போஜனம் முதலிய கார்யங்களைக் கூடுமானவரையில் நீக்கவேண்டியது. கொஞ்சம் ஸௌக்யமுண்டானவுடனே அந்தத்தொழிலை விட்டுவிடவேண்டும்.

சூத்ரன் ப்ராஹ்மணனுக்குப் பணிவிடைசெய்வதனால் தன் பார்யை, குழந்தைகள் முதலானவர்களின் பசியைத்தீர்க்கக்கூடாவிடில், பக்ஷணம் முதலியவற்றைச்செய்து விற்றுப்பிழைக்கலாம். பின்னும் எந்தத்தொழிலினால் த்விஜாதிகள் உபசரிக்கப்படுவார்களோ அவ்விதமான சிற்பவேலை, தச்சுவேலைகளைசெய்தும் ஜீவிக்கலாம்.

ஜீவனமில்லாமல் வருத்தப்படுகிற ப்ராஹ்மணன், க்ஷத்ரிய, வைச்ய ஜாதித்தொழிலையனுஸரியாமல் தன் ஜாதித்தொழிலினால் பிழைக்க நினைத்தால், மேற்சொல்லுகிற தர்மப்படி நடத்தவேண்டும். விருத்தியில்லாமல் துன்பப்படுகிற ப்ராஹ்மணன் ஸங்கர

ஜாதியர் முதலான தகாதவரிடத்திலும் தானம்வாங்கலாம். அதனால் அவனுக்குத் தோஷம்வராது. (உதாஹரணம்: பரிசுத்தமான கங்காஜலம் முதலானவற்றில் தெருத்தண்ணீர் விழுவதனால் தோஷமுண்டாகுமா?) விருத்தியில்லாமல் வருத்தப்படுகிற ப்ராஹ்மணனுக்குத் தகாதவனுக்கு ஓதிவைத்தல், யாகஞ்செய்வித்தல், நிந்திக்கத்தக்க தானம்வாங்குகல் இவைகளினால் தோஷமில்லை. அவன், நீர் நெருப்புகளைப்போல் ஸ்வபாவத்தில் பரிசுத்தனல்லவா? ப்ராணன் போகும்படியான ஆபத்தையடைந்தவன், ப்ரதிலோமஜாதியான் முதலான எவனுடைய அன்னத்தைச்சாப்பிட்டபோதிலும் ஆகாசத்திலெறிந்த சேறுபோல் அவனிடத்திற் பாபமொட்டாது.

அஜீகர்த்தரென்னும் முனி பசியினால் வருத்தப்பட்டுச் சுனச்சேபன் என்னும் தன் பிள்ளையை நூறு பசுக்களை வாங்கிக்கொண்டு யஜ்ஞபசுவாகக்கொல்லும்படி தானே விற்றார். அவருக்கு அதனால் பாபம் நேரிடவில்லை.

தாமத்தையும் அதர்மத்தையும் நன்குயறிந்த வாமதேவரும், பசியினால் கஷ்டப்பட்டு ப்ராணனைக்காப்பாற்றும்பொருட்டு நாயின் மாம்ஸத்தைச்சாப்பிட யத்னித்தார். அவருக்கு அதனால் பாபம் நேரிடவில்லை.

தபஸில் சரேஷ்டரான பரத்வாஜர் தனது புத்ரனுடன் மனுஷ்யஸஞ்சாரமில்லாத காட்டில் பசியால் வருந்திப், பிருது என்னும் தச்சனிடத்தில் அநேகம்பசுக்களைத் தானம்வாங்கினார்.

விசுவாமித்ரர் பசியைப்பொறுக்கமுடியாமல் சண்டாளன் கையிலிருந்த நாயின் முழங்கால் மாம்ஸத்தை வாங்கிப்புஜிக்க யத்னித்தார். அதனால் அவருக்குப் பாபம் உண்டாகவில்லை.

[குரு என்னும் தேசம் ஆலங்கட்டியால் பீடிக்கப்பட்டுப் பஞ்சம் நேர்ந்தபொழுது, சக்ராயணர் புத்ரனான உஷஸ்தியென்பவர், பருவமடையாத தனது பார்யையுடன் இப்யக்ராமத்தில் வஸித்தார். ஒருநாள், பசியைப்பொறுக்கமுடியாமல் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கையில், ஒரு யானைப்பாகன் அவரைக்கொட்டைகளைச் சுண்டித்தின்பதைக்கண்டு, "ஓ, தாமவானே! நான் பசியால் மிகவும் வருந்துகிறேன்; எனக்கு ஏதாவது ஆஹாரம் கொடுத்து என் உயிரைககாப்பாற்று" என்று ப்ரார்த்தித்தார்,

அவனும், "ஸ்வாமி! இதோ என்னிடத்திலிருக்கும் அவரைக்கொட்டைகளைத்தவிர வேறுபதார்த்தமில்லை; என்ன செய்வேன்" என்றான்.

உஷஸ்தி, "அதையாவது எனக்குக்கொடு" என்று கேட்டு வாங்கிப் பசியைத்தீர்த்துக்கொண்டார்.

அவன், "ஸ்வாமி! இதோ தாஹத்திற்குத் தண்ணீர்" என்று கொடுத்தான்.

உஷஸ்தி, "அது சூத்ரசேஷம்" என்றார்.

அவன், "ஸ்வாமி! தாங்கள் புஜித்த அவரைக்கொட்டைகள் மாத்ரம் சேஷமில்லையா?" என்று கேட்டான்.

உஷஸ்தி, "அவைகளைப் புஜிக்காவிட்டால் என் ப்ராணன் நிற்காது. பிறகு நீ கொடுத்த தண்ணீர் அனுவச்யம்" என்றார்.

இதனால் ப்ராஹ்மணன் ஆபத்காலத்தில தன் உயிரைக்காப்பாற்றபோதுமான ஆஹாரத்தைமாத்ரம் தாழ்ந்த ஜாதியார்களிடத்தில வாஙகிக்கொள்ளலாமென்று தெரிகிறது.—(சாந்தோக்யோபநிஷத். 1-10.)]

கெட்டவனிடத்தில் தானம்வாங்குதல், ஒழுக்கமில்லாதவனுக்கு யாகஞ்செய்வித்தல், வேதாத்யயனம் செய்வித்தல, இம்மூன்றிலும் தானம் வாங்குதல் தாழ்ந்தது. அது ப்ராஹ்மணனுக்கு நரக ஹேதுவாகும். ஒன்றாலும் ஜீவிக்கமுடியாதபோது அதைச் செய்யலாம். ஏனென்றால், யாகம் செய்விப்பதும், வேதாத்யயனம் செய்விப்பதும், உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களுள்ளவனுக்கே செய்விக்கப்படும். தானம் வாங்குவது மாத்ரம் ஸம்ஸ்காரமில்லாத சூத்ரனிடத்திலும் சண்டாளர்களிடத்திலும் நேருமாதலால் அது தாழ்ந்தது. மற்றவிரண்டும் ஜபத்தாலும் ஹோமததாலும் போக்கடிக்கப்படும். தானம் வாங்கின பாபம், அந்தப்பொருளைத் தானம் செய்தாலொழியத் தீராது. ப்ராஹ்மணன் ஒன்றினாலும் ஜீவிக்கமுடியாதபோது சிந்தின கதிர்நெலலைப்பொறுக்குவதினாலாவது, சிந்தின தனிநெல்லைப்பொறுக்குவதினாலாவது ஜீவிக்கலாம். கெட்டதானம் வாங்குவதைவிட இவை மேலானவை. பிழைப்பில்லாமல் வருந்தப்படுகிற கர்மானுஷ்டானமுள்ள ப்ராஹ்மணன் தன் குடும்பஜீவனத்திற்காகத் தான்யம், வஸ்த்ரம முதலியவைகளையும், யாகத்திற்காக த்ரவ்யத்தையும் சாஸ்த்ரப்படி நீதி செலுத்தாத அரசனிடத்திலும் வாங்கலாம். அவன் லோபகுணத்தால் கொடுக்காவிடில் அவனை யாசிக்கக்கூடாது. பயிரிட்டிருக்கிற நிலத்தைத்தானம் வாங்குவதைவிடப் பயிரிடாத நிலத்தைத் தானம் வாங்குவது மேலானது. இப்படியே பசு, வெள்ளாடு, ஸுவர்ணம், தான்யம், அன்னம் இவைகளில் முன் சொலலப்பட்டவைகளைவிடப் பின் சொல்லியவைகளைத் தானம் வாங்குவதில் அதிகதோஷம்.

மேற்சொல்லப்போகிற ஏழுவிதங்களினாலும் ஸம்பாதித்த பொருள் தோஷமில்லாதது. அவைகளில் பிதுரார்ஜிதம், புதையல், க்ரயப்பொருள் இம்மூன்றும எல்லா வர்ணத்தாருக்கும் ஸமம். ஜயப்பொருள் க்ஷத்ரியனுக்கும், வட்டிவாங்குதல், வர்த்தகம் அல்லது பயிரிடுதல் இவ்விரண்டும் வைச்யனுக்கும், நல்லவனிடத்தில் தானம் வாங்குதல் ப்ராஹ்மணனுக்கும் உயர்ந்தது. வைத்யம், தர்க்கம் முதலிய வித்யைகள், சிற்பவேலை, அரசனிடத்தில் ஸேவகஞ்செய்வது, மற்றவர்களிடத்தில் ஏவல்தொழில் செய்வது, பசுக்களை மேய்ப்பது, வர்த்தகம், பயிரிடுவது, கண்டவிடத்தில பிக்ஷையெடுப்பது, வட்டிவாங்குவது இந்தப் பத்தும் ஆபத்காலத்தில் செய்யக்கூடிய தொழில்கள். முக்யமாய் ப்ராஹ்மணனும் க்ஷத்ரியனும் வட்டிவாங்கக்கூடாது. ஆனால் வட்டிப்பொருளைத் தர்மத்திற்குபயோகப்படுத்தினால் கால்வட்டி அல்லது அரைவட்டி வாங்கலாம்.

க்ஷத்ரியன் மிகுந்த ஆபத்காலத்திலும் ப்ரஜைகளைக் காப்பாற்றுகிறபடியால் நாலிலொன்று தான்யத்தீர்வை வாங்கினாலும் தோஷமில்லை. க்ஷத்ரியனுக்குச் சத்ருவை ஜயிப்பது ஜாதிதர்மம். யுத்தத்தில் பயத்தினால் திரும்பிவரக்கூடாது. பெரும்பாலும் தனிகர்களாயும் வ்யாபாரிகளாயுமிருக்கும் வைச்யர்களைத் திருடர்களிடத்திலிருந்து ஆயுதமெடுத்துக்காப்பாற்றித், தர்மப்படி மேற்சொல்லுமவிதமாகக் கப்பம் வாங்கவேண்டும். தான்யவ்யாபாரம் செய்கிற வைசயர்களிடத்தில இருபதில் எட்டுப்பங்கையும், ஐம்பதில் ஒன்று வாங்கவேண்டிய ரொக்கலாபத்தில் இருபதிலொன்றையும் வாங்கிக்கொள்ளலாம். எப்போதும் தொழில் செய்கிற சூத்ரர்களிடத்திலும், தச்சன், கம்மாளன் முதலிய தொழிலாளிகளிடத்திலும் தீர்வைவாங்கக்கூடாது. அவர்களிடத்தில வேலை வாங்கிககொள்ளுதலே தீர்வையாம்.

சூத்ரன், ப்ராஹ்மணசுச்ரூஷையால ஜீவிக்கமுடியாதபோது, க்ஷத்ரியனையாவது, தனவானான வைச்யனையாவது அடுத்து ஜீவிக்கலாம். சூத்ரன் ஜீவனத்திற்காவது, ஸ்வர்க்கத்திற்காவது, அல்லது இரண்டிற்குமாவது ப்ராஹ்மணனையே அடையவேண்டும். "இவன் ப்ராஹ்மணனையடுத்த சூத்ரனெ"ன்று அவனுக்குப்பெயர்வந்தால் அதே அவனுக்குப்பாக்யம். ஆதலால் ப்ராஹ்மணனை உபசரிப்பது சூத்ரனுக்கு எல்லாத் தொழிலையும்விட மேலான தர்மமென்றும், மற்றவையெல்லாம் பயனில்லாதவையென்றும கர்மகாண்டத்தில சொல்லியிருக்கிறது. ப்ராஹ்மணன் தனக்கு வேலை செய்கிற சூத்ரனுடைய சக்தியையும், அவன் செய்யும் பணிவி

டையையும் அவன் காப்பாற்றவேண்டிய குடும்பத்தையும் யோசித்து, ஜீவனத்திற்குத்தக்கபடி கூலி ஏற்படுத்தவேண்டும். மேலும், மிகுந்த அன்னம், பழைய வஸ்த்ரம், நொய்முதலிய ஸாரமில்லாத தான்யம், பழையபாத்ரம் முதலியவைகளைத் தன்னையடுத்த சூத்ரனுக்குக்கொடுக்கவேண்டும். சாப்பிடத்தகாத முள்ளங்கி முதலியவற்றைச் சாப்பிட்டதால் சூத்ரனுக்குத் தோஷமில்லை. அவனுக்கு உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களும், அக்னிஹோத்ரம் முதலிய வைதிக கர்மங்களுங்கிடையாது. ஆனால் பாகயக்ஞம் முதலிய தர்மகாரியங்கள்மாத்ரம் அவனுக்கு நீக்கப்படவில்லை. தனது ஜாதிகர்மமறிந்த சூத்ரர்கள் மேல்ஜாதியாரின் தர்மமான பாகயக்ஞத்தையனுஷ்டிக்கும்போது, வேதமந்த்ரமில்லாமல் ஸம்ஸ்காரமந்த்ரத்தால் பஞ்சயஞ்ஞங்களைக் குலவழக்கப்படி அனுஷ்டித்தால், லோகத்தாரால் தூஷிக்கப்படாமல் புகழையடைவார்கள். சூத்ரன் பிறருடைய குணங்களைத் தூஷியாமல் மேல்ஜாதியார்களைப்போல தானும் நல்லொழுக்கமாக நடந்தால், இந்தலோகத்தில் கீர்த்தியையும் பரலோகத்தில் நல்ல கதியையும் அடைவான். சூத்ரன் தனத்தை ஸம்பாதிக்கக்கூடியவனாயிருந்தாலும் தனது குடும்ப ஸம்ரக்ஷணத்திற்குப் போதுமானதைவிட அதிகமாக ஸம்பாதிக்கக்கூடாது. அப்படி ஸம்பாதித்தால் தன்னால் உபசரிக்கத்தக்க ப்ராஹ்மணர்களையே ஹிம்சைசெய்யும்படி நேரிடும்.—(மனுஸ்மிருதி. 10.)

ஆச்ரமதர்மம்.

முதல் மூன்று வர்ணத்தாருக்கும் தொப்புள் கொடியறுப்பதற்கு முன்னம் புருஷனுக்கு ஜாதகர்மமென்னும் ஸம்ஸ்காரம் செய்யவேண்டியது. அப்போது அந்தக்குழந்தைக்கு நெய், தேன் இவற்றில் ஸுவர்ணத்தை மந்த்ரத்தோடிழைத்து நாவில்தடவவேண்டியது.

பிறந்த பத்தாவது அல்லது பன்னிரண்டாவது தினத்தில் புண்ய திதியில், நல்ல முஹூர்த்தத்தில், நல்ல நக்ஷத்ரத்தில் நாமகரணஞ்செய்யவேண்டியது. ப்ராஹ்மணனுக்கு மங்களத்தையும், க்ஷத்ரியனுக்குப் பலத்தையும், வைச்யனுக்குப் பொருளையும், சூத்ரனுக்குத் தாழ்வையும் காட்டுகிற பெயர்களையிடவேண்டியது. ப்ராஹ்மணனுக்குச் சர்மவென்பதையும், க்ஷத்ரியனுக்கு வர்மனென்பதையும், வைச்யனுக்குப் பூதியென்பதையும், சூத்ரனுக்குத் தாஸனென்பதையும் தொடர்ப்பெயராக இடவேண்டியது. ஸ்திரீகளுக்கு, ஸுலபமாகக்கூப்பிடத்தக்கதாயும், கொடுமையில்லாததா

யும், பிரிவான அர்த்தமுள்ளதாயும், மனோஜ்ஞமாயும், மங்களமர யும், தீர்க்காக்ஷரத்தையுடையதாயும், ஆசீர்வாத ரூபமாயுமிருக்கிற பெயரையிடவேண்டும்.

பிறந்தநான்காவது மாஸத்தில் அந்தச்சிசுவைப் பிறந்த வீட்டினின்றும் வெளியிற்கொண்டுவந்து ஸூர்யனுக்குக்காட்ட வேண்டியது (ஸூர்யதர்சனம்.)

ஆறாவதுமாஸத்தில் அன்னப்ராசனம் செய்விக்கவேண்டியது. அல்லது, தங்கள்குல வழக்கப்படி மூன்றாவதுமாதந்தொடங்கி எப்போதாவது இவ்விரண்டையுஞ் செய்யலாம்.

த்விஜாதிகளுக்குப் பிறந்தவாஷத்திலாவது மூன்றாவதவர்ஷத்திலாவது, வேதத்திற்சொன்னபடி தர்மமாகச சௌளகர்மஞ் செய்யவேண்டியது.

ப்ரஹ்மசர்ய தர்மம். ப்ராஹ்மணனுக்குக் கர்ப்பமானதுமுதல எட்டாவது வயஸிலும், க்ஷத்ரியனுக்குக் கர்ப்பமானதுமுதல் பதினோராவது வயஸிலும, வைசயனுக்கு பன்னிரண்டாவது வயஸிலும் உபநயனஞ்செய்யவேண்டியது. ப்ரஹ்ம தேஜஸை விரும்புகிற ப்ராஹ்மணனுக்கு ஐந்தாவது வயஸிலும், பலத்தை விரும்புகிற க்ஷத்ரியனுக்கு ஆறாவது வயஸிலும, பொருளை விரும்புகிற வைச்யனுக்கு எட்டாவது வயஸிலும் உபநயனஞ்செய்யத்தக்கது. ப்ராஹ்மணனுக்குப பதினாறு வயஸ்வரையிலும், க்ஷத்ரியனுக்கு இருபத்திரண்டு வயஸ்வரையிலும், வைச்யனுக்கு இருபத்திநாலு வயஸ்வரையிலும் உபநயனத்தை இரண்டாமபக்ஷமாகச் செய்யலாம். இந்த மூன்று வர்ணத்தாரும் மேற்சொலலியகாலத்தில உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களிலலாதவர்களானல் காயத்ரீ மந்த்ரத்தினின்றும நீங்கினவர்களாயும், வ்ராத்யர்களென்னும் பெயருள்ளவர்களாயும், பெரியோர்களால் வைதிககார்யங்களிலிருந்து நீக்கபபட்டவர்களாயுமாகிறார்கள். இப்படிப் பரிசுத்தமில்லாத வ்ராத்யர்களுக்கு வேதாத்யயனஞ் செய்விக்கக்கூடாது. கஷ்டகாலத்திலும் அவர்களிடத்தில் பெண் வாங்கவும் கொடுக்கவுங்கூடாது.

ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்யப்ரஹ்மசாரிகள், முறையே கறுப்புமான், புள்ளிமான், வெள்ளாடுகளின் தோல்களை உத்தரீயமாகவும், சணப்பநார், பட்டுநூல், செம்மறியாட்டின் மயிர்களால் செய்யப்பட்ட வஸ்த்ரங்களை அரையிலும் வர்ணக்ரமமாய்த் தரிக்க வேண்டியது. ப்ராஹ்மணனுக்கு முஞ்சிப்புல்லினாலும், க்ஷத்ரியனுக்கு வில்லின் நாண்கயிற்றைப்போலிருக்கும் முறுவல்புல்லினாலும், வைச்யனுக்குச சணப்பநாரினாலும் மேடுபள்ளமில்லாமல்

மெல்லியதாகவுமின்றி மூன்றுவடமாக மேல்அரைஞாண் கட்ட வேண்டியது. இவையகப்படாதகாலத்தில முறையோ தர்ப்பை, நாணல், சவட்டைக்கோரைகளால் மூன்றுவடங்களாயாவது, அல்லது தங்கள் குலவழக்கப்படி ஐந்துவடங்களாயாவது ஒரு முடியுடன் கட்டவேண்டியது. ப்ராஹ்மணன் பருத்தூலாலும், க்ஷத்ரியன் சணப்பநூலாலும, வைச்யன வெள்ளாட்டின் மயிராலும மூன்றுவடங்களாக முறுக்கப்பட்ட பூணூலைத் தோளில் தரிக்க வேண்டியது. ப்ராஹ்மணனுக்குப் பில்வம, பலாசம்; க்ஷத்ரியனுக்கு ஆல், கருங்காலி; வைசயனுக்கு இரளி, அத்தி முதலியவைகள தண்டங்களாக விதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒன்றையே தரிக்கவேண்டியது. ப்ராஹ்மணன் பூமிமுதல் தலையளவும, க்ஷத்ரியன் நெற்றியளவும, வைச்யன் மூக்களவுமுள்ள தண்டத்தைததரிக்கவேண்டியது. இவை கோணலில்லாமலும, காயமில்லாமலும, பார்வைக்கு அழகாயும, பிறாக்குப பயத்தை யுண்டுபண்ணாமலும, தோலுடன் கூடினவைகளயும், நெருப்பினால் சுடப்பட்டவைகளாயுமிருக்கவேண்டியது.

அவரவாகளுக்கு இஷ்டமான ஒரு தண்டத்தையெடுத்துக் கொண்டு, ஸூர்யனை நமஸ்காரம செய்து, அக்னியைப்ரதக்ஷணம் செயது, ப்ராஹ்மணன் 'பவதிபிக்ஷாந்தேஹி' யென்றும், க்ஷத்ரியன் 'பிக்ஷாம்பவதிதேஹி' என்றும், வைசயன 'தேஹி பிக்ஷாம்பவதி' யென்றும சொல்லிக்கொண்டு பிக்ஷைகேட்க வேண்டியது. உபநயனமானவுடனே தன் தாயிடத்திலாவது, அவளுடைய தங்கை தமக்கைகளிடத்திலாவது, தந்தை தமக்கையிடத்திலாவது, தன்னிடத்தில அன்புடையவாகளிடத்திலாவது முதலில பிக்ஷைவாங்கவேண்டியது. இப்படி மூன்றிடங்களுக்குக் குறையாமல போதுமானமட்டும் பிக்ஷைவாங்கி, அதைத் தன் குருவுக்கு நிவேதனஞ்செய்து, கிழக்குமுகமாகவிருந்து ஆசமனம்செய்து புஜிக்கவேண்டியது.

ஆயுளை விரும்புகிறவன் கிழக்குமுகமாயும, கீர்த்தியை விரும்புகிறவன் தெற்குமுகமாயும, ஸம்பத்தை விரும்புகிறவன் மேற்குமுகமாயும், ஸத்யத்தை விரும்புகிறவன் வடக்குமுகமாயும இருந்து புஜிக்கவேண்டியது. தினந்தோறும் சாப்பிடும்போது கைகால்களைச் சுத்தஞ்செய்துகொண்டு, ஆசமனஞ்செய்து, அன்னத்தைப் பூஜித்துப் பரிஷேசனம்செய்து, போஜனஞ்செய்யவேண்டியது. பின்பு கண், காது, மூக்குகளைத்துடைத்து ஆசமனஞ் செய்யவேண்டியது. அன்னம பரஹ்மஸ்வரூபமாகையால, அதை நிந்தியாமல் பூஜித்து சந்தோஷத்துடன் நன்முகப்பார்த்துப் புகழ்

ந்து புஜிக்கவேண்டியது; அப்படிச் செய்வதால் தைர்யமும் பலமும் விருத்தியாகின்றன; நிந்தித்தால் இவ்விரண்டுமழிந்துபோகின்றன. தான் புஜித்து மிகுந்த எச்சிலன்னத்தை எவனுக்கும் போடக்கூடாது. இரவும் பகலும் இரண்டுதடவைக்குமேல் புஜிக்கலாகாது. அதிகமாகவும் புஜிக்கலாகாது. புஜிக்கும்போது மத்தியில் எழுந்திருந்தால் பிறகு அன்னத்தைப்புஜிக்கலாகாது. கைகால்களைச் சுத்திபண்ணாமல் அசுத்தர்களைப்பார்க்கலாகாது. அதிகமாகப் புஜித்தால் நோய்விளையும்; ஆயுஸ், ஸ்வர்க்காதிபோகங்கள், புண்யம் குறையும்; லோக நிந்தையும் உண்டாகும்.

மூன்றுவர்ணத்துப் ப்ராஹ்மசாரிகளுடைய முஞ்ஜி, உத்தரீயம், தண்டம், பூணூல், கமண்டலம் அசுத்தமானாலும் பின்னமானாலும், ஜலத்தில் புதைத்துவிட்டுப் புதியவைகளைச் சாஸ்த்ரப்படி க்ரஹிக்கவேண்டியது.

கேசாந்தம் என்னும் வ்ரதமானது, ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைசியன் இவர்களுக்கு முறையே பதினாறாவது, இருபத்திரண்டாவது இருபத்திநான்காவது வயஸில் செய்யவேண்டியது. குரு அல்லது தகப்பன் தனது சிஷ்யன் அல்லது புத்ரனுக்கு உபநயனம் செய்வித்து, ஆசாரம், சௌசம், ஸமிதாதானம், ஸந்த்யாவந்தனம் இவைகளைக்கற்பிக்கவேண்டியது.

குருவினுடைய க்ருஹத்தில் கவனத்துடன் ப்ராஹ்மசர்ய வ்ரதத்தையனுஷ்டித்துக்கொண்டு **வேதாத்யயனம்** செய்யவேண்டியது. சிஷ்யன் சாஸ்த்ரப்படி ஆசமனஞ்செய்து, சுத்தமான வஸ்த்ரத்தையுடுத்துக்கொண்டு, இந்த்ரியங்களையடக்கினவனாய், வடக்கு அல்லது கிழக்குமுகமாயக் கைகளைக்கட்டிக்கொண்டு வேதாத்யயனம் செய்யவேண்டியது. (இதற்கு ப்ரஹ்மாஞ்ஜலி என்று பெயர்). அத்யயனத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் குருவின் பாதங்களைத்தொட்டு நமஸ்காரம் செய்யவேண்டியது. அப்பொழுது இரண்டு கைகளையும்மாற்றி வைத்துக்கொண்டு, தனது வலதுகையால் குருவின் வலதுகாலையும், இடதுகையால் குருவின் இடதுகாலையும் தொடவேண்டியது. குருவும், சோம்பலில்லாமல் சிஷ்யனை நாள்தோறும் அத்யயன ஆரம்பத்தில் 'தொடங்கு' என்றும், முடிவில் 'நிறுத்து' என்றும் சொல்லவேண்டியது. ப்ராஹ்மணன் ப்ரணவத்தையுச்சரித்து அத்யயனத்தை ஆரம்பித்து முடிக்கவேண்டியது.—(மனுஸ்மிருதி 2.)

ஒவ்வொரு தினமும் தனது குருவின் ஸ்நானத்திற்காக உபயோகிக்கப்பட்ட ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டியது. பிறகு ஸந்த்யாவந்தனத்தை முடித்துக்கொண்டு, ஸூர்யனை

நமஸ்காரம்செய்து, குருவினுடைய நித்யநைமித்திககர்மங்களுக்கு வேண்டிய தண்ணீர், தேவபூஜைக்குரிய புஷ்பங்கள், சாணம், மண், தர்ப்பை முதலிய பதார்த்தங்களைக் குருவுக்கு வேண்டியமட்டில் கொண்டுவந்து கொடுக்கவேண்டியது. வனத்தில் பரிசுத்தமான விடத்திற்குப்போய், விதிப்படி பலாசம் முதலிய ஸமித்களைக்கொண்டுவந்து, கையில் வைத்துக்கொண்டு, வெயிலிலாவது, அதற்குச் சக்தியில்லாவிட்டால் இறப்பிலாவது உலர்த்தவேண்டியது. அவைகளால் காலையிலும் மாலையிலும் அக்னியில் ஹோமஞ்செய்யவேண்டியது. இதுதான் ஸமிதாதானம்.

குருவினுடைய அனுமதியின்பேரில், ஆஹாரத்திற்காகத் தங்களுடைய வர்ணாச்ரமதர்மங்களைக் குறைவில்லாமல் அனுஷ்டிக்கும் கிருஹஸ்தர்களுடைய கிருஹங்களில் சமயல் செய்த அன்னத்தை யாசிக்கவேண்டியது. குருவினுடைய குலத்திலும், ஞாதிகளிடத்திலும், பந்துக்களிடத்திலும் அன்னத்தை யாசிக்கக்கூடாது. வேறு கிருஹங்களில் கிடைக்காமற்போனால், பந்துக்களையும், ஞாதிகளையும், குருவினுடைய ஞாதிகளையும் யாசிக்கலாம். மேற்சொன்னவர்கள் கிடைக்காமற்போனால, கிராமம்முழுவதிலும் சுத்தனாய, மௌனமாய், மஹாபாதகங்கள் முதலானவைகளால கெடுக்கப்பட்டவர்களைத்தவிர மற்றவர்களை யாசிக்கலாம். ஒவ்வொருநாளும பிக்ஷைசெய்தே ஜீவிக்கவேண்டியது. ஒரே வீட்டில் தனக்குவேண்டிய அன்னம்முழுவதையும் யாசிக்கக்கூடாது. இது உபவாஸத்திற்கு ஸமமென்று ரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. தேவதைகள், பித்ருக்கள் இவர்களை உத்தேசித்துச்செய்யும் கர்மங்களில ப்ரார்த்திக்கப்பட்டால், தனது வ்ரதத்திற்கு விரோதமான மது, மாம்ஸம முதலிய பதார்த்தங்களை விலக்கிப் பிறருடைய அன்னத்தைப் போஜனம்செய்யலாம். இது ப்ராஹ்மண ப்ரஹ்மசாரிக்கு ஏற்பட்டது; மற்றவர்களுக்கல்ல.

ஒவ்வொருதினமும் சுத்தனாயத தேவர்ஷிபித்ரு தர்ப்பணங்களையும், தேவபூஜையையும், காலையிலும் மாலையிலும் ஸமித்களால் ஹோமத்தையும் செய்யவேண்டியது. மது, மாம்ஸம், வாஸனைத்ரவ்யங்கள், மாலைகள், ரஸங்கள், ஸ்த்ரீகள், ப்ராணிஹிம்ஸை, தேஹமுழுவதிலும எண்ணெயிட்டுக்கொள்ளுதல், மையிட்டுக்கொள்ளுதல், பாதரக்ஷை, குடை, காமம், க்ரோதம், லோபம், நர்த்தனம், பாட்டு, வாத்யங்கள், சூது, வீண்பேச்சு, பரநிந்தை, பொய், ஸ்த்ரீகளை ஆசையுடன்பார்த்தல், ஆலிங்கனம் செய்தல், பிறர்க்கபகாரம் செய்தல் இவைகளை விலக்கவேண்டியது.

ஒவ்வொருநாளும் ஆசார்யன் கட்டளையிட்டாலும் இடாவிட்டாலும் வேதாத்யயனம் செய்யவேண்டியது. குருவின் முகத்தைப்பார்த்துக்கொண்டு சரீரம் வாக்கு, புத்தி, இந்த்ரியம், மனஸ் முதலியவைகளையடக்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு நிற்கவேண்டியது. எப்பொழுதும் தேஹத்தைவஸ்த்ரத்தால மறைத்துக்கொண்டு, வெளியில் வலதுகைமாத்ரம தெரியும்படியாக, 'உட்காரு' என்று குரு உத்திரவு செய்தபிறகு அவருக்கெதிராக உட்காரவேண்டியது. எப்பொழுதும் குருவுக்கு எதிரில் அவரைவிட உயர்ந்த ஆஹாரங்களைப் புஜிப்பதும், உயர்ந்த வஸ்த்ரங்களையணிவதும், உயர்ந்த வேஷத்தோடிருப்பதுங்கூடாது. ராத்ரி, குரு நித்ரை செய்தபிறகு சிஷ்யன் நித்ரைசெய்வதும், காலையில் அவா எழுந்திருப்பதற்குமுன் சிஷ்யன எழுந்திருபபதும உசிதம். குருவினுடைய கட்டளையைச சிஷ்யன் படுத்துக்கொண்டும், உட்கார்ந்துகொண்டும், புஜித்துக்கொண்டும், நடந்துகொண்டும், பராமுகமாயிருந்துகொணடும கேட்கக்கூடாது; மறுமொழி சொல்லவுங்கூடாது. குரு உட்கார்ந்து சொல்லுகையில் தான் நின்றுகொண்டும், அவர் நிற்கும்போது தான ஸமீபத்தில் நின்றுகொண்டும், அவர் தனக்கெதிராக வந்து சொல்லும்பொழுது தான் எதிர்கொண்டுபோயும், அவர் நடக்கும்போது தான் பின்தொடர்ந்து ஓடிக்கொண்டும், அவா பராமுகமாயிருககும்போது அவருக்கெதிரில் வந்தும், அவர் தூரத்திலிருக்கும்போது ஸமீபத்தில் வந்தும், அவர் படுத்திருக்கும்போதும் ஸமீபத்திலிருக்குமபோதும் தன் தேகத்தை வணக்கிக்கொண்டு, குருவின் கட்டளையைக்கேட்டு மறுமொழி சொல்லவேண்டியது. குருவுக்கெதிரில் தன்னுடைய ஆஸனமும் படுக்கையும் அவருடையதைவிடத் தாழ்ந்திருக்கவேண்டியது. அவருக்கெதிரில் தனக்கிஷ்டமான ஆஸனத்தில் உட்காரக்கூடாது. அவருடைய பெயரை அவரில்லாதவிடத்திலும் மர்யாதைதவறி உச்சரிக்கக்கூடாது. அவருடைய நடை, பேச்சு, சேஷ்டைகள் முதலியவைகளைப் பரிஹாஸத்திற்காக அனுஸரிக்கக்கூடாது. தனது குருவை ந்யாயமாகவாவது, அந்யாயமாகவாவது, இகழ்ந்துபேசுமிடத்தில் இருக்கக்கூடாது; இருக்கும்படி நேர்ந்தால காதுகளை மூடிக்கொள்ளவேண்டியது. தனது குருவால் ஏவப்பட்டு, தான் தூரத்திலிருந்துகொண்டு, வேறொரு குருவை வஸ்த்ரம்முதலியவைகளால் உபசரிக்கக்கூடாது. ஸ்த்ரீயினுடைய ஸமீபத்தில் அவரிருக்கும்பொழுது அவரிடத்திற் சென்று உபசரிக்கக்கூடாது. தான் ஆஸனங்களிலும் வாஹனங்களிலுமிருந்துகொண்டு குருவை நமஸ்கரிக்கக்கூடாது. விருஷ

பம் குதிரை, ஒட்டகம், பூட்டிய வாஹனங்களிலும், மாடி வீட்டிலும், பாயின்மேலும், கல், பலகை முதலியவைகளால் செய்யப்பட்ட ஆஸனங்களிலும், ஓடத்திலும், குருவுடன் உட்காரலாம்.

குருவினுடைய குருவைக்கண்டால் தனது குருவைப்போல் உபசரிக்கவேண்டியது. குருவினுடைய வீட்டில் வஸிக்கும்பொழுது, தனது மாதா, பிதா, பூஜிகத்தக்க மற்ற பந்துக்களை வந்தால், குருவினுடைய உத்திரவில்லாமல் அவர்களைப் பூஜிக்கக்கூடாது. வித்யையையுபதேசித்த குருக்கள், தனது பந்துக்கள், தர்மதத்வத்தையுபதேசித்தவர்கள், வித்யை தபஸ் முதலியவைகளில் சிறந்த குருபுத்ரர்கள், குருவின் ஞாதிகள் முதலியவர்களிடத்தில் குருவுக்குச் செய்யும் மர்யாதையைச் செய்யவேண்டியது. தனது வர்ணத்துக் குருபத்னிகளைக் குருவைப்போல், அவர்களுடைய கட்டளைப்படி நடப்பது முதலியவைகளால் பூஜிக்கவேண்டியது. இதர வர்ணங்களிற் பிறந்தவர்களாயிருந்தால், எழுந்திருந்து அபிவாதனஞ் செய்வதுமாத்ரம் போதும். குருபத்னிக்கு தேஹத்தில் எண்ணெயிடுவது, ஸ்நானம் செய்விப்பது, கைகால் பிடிப்பது, தலையில் புஷ்பங்களால் அலங்காரஞ் செய்வது, சந்தனம் பூசுவது முதலிய கார்யங்களைச் சிஷ்யன் செய்யக்கூடாது. குருபத்னியானவள் பால்ய ஸ்த்ரீயாயிருந்தால், இருபது வயஸாகி மேற்பட்ட சிஷ்யன் பாதங்களைத்தொட்டு நமஸ்கரிக்கக்கூடாது. பூமியில் நமஸ்கரித்துத் தனது பெயரைச் சொல்லவேண்டியது.

தலையை முழுவதும் க்ஷவரஞ்செய்துகொண்டாவது, ஜடையை வளர்த்துக்கொண்டாவது, சிகையை ஜடையாகவளர்த்துக்கொண்டாவதிருக்கலாம். தாய்தந்தை, ஆசார்யர்களின் இஷ்டப்படி தினந்தோறும் நடக்கவேண்டியது. அவர்கள் ஸந்தோஷப்பட்டால் ஸகல தபஸினுடைய பலமும் ஸித்திக்கும். அவர்களின் உத்திரவில்லாமல் ஸ்வயமாய் வேறொரு தர்மத்தையும் செய்யக்கூடாது. மாதிருபக்தியால் இவ்வுலகத்தில் ஸாகத்தையும், பிதிருபக்தியால் ஸ்வர்க்கத்தையும், ஆசார்யபக்தியால் ப்ராஹ்மலோகத்தையுமடைகிறான். இவர்கள் ஜீவித்திருக்கும்வரையில் வேறொருதர்மத்தில் மனஸைவைக்காமல் அவர்களுடைய பணிவிடையை அன்போடு செய்யவேண்டியது. அதற்கு விரோதமில்லாமல் அவர்களின் உத்திரவினால் பரலோகத்திற்குரிய ஏதாவது ஒரு தர்மத்தை மனோவாக்குக்காயங்களால் செய்யவேண்டியது. செய்தபிறகும் அவர்களுக்குத்தெரிவிக்கவேண்டியது.

யக்ஞம்முதலான கர்மங்கள் மேற்சொன்ன சுச்ரூஷைக்கு ஸமமல்ல.

ப்ராஹ்மணன் கிடைக்காமல் ஆபத்காலம் நேரிட்டால், க்ஷத்ரியர்கள் வைச்யர்களிடத்திலிருந்தும் வேதத்தை ஓதவேண்டியது. வேதம் ஓதி முடிகிறவரையில் அந்தக் குருவுக்குப் பணிவிடை செய்யவேண்டியது. க்ஷத்ரிய, வைசய குருவினிடத்திலும், அனுஷ்டானமில்லாத ப்ராஹ்மணகுருவினிடத்திலும், வேதமோதினபின்பு வஸிக்கக்கூடாது.

ப்ராஹ்மசாரிக்கு விவாஹம் செய்துகொள்ள இஷ்டமில்லாமல் குருகுலவாஸத்திலேயே மனஸிருந்தால், இந்த்ரியங்களை யடக்கிக்கொண்டு ஞானியான ப்ராஹ்மணனிடத்தில் தானுள்ளவரையில் நைஷ்டிக ப்ராஹ்மசாரியாய் வஸிக்கலாம். அவன் சாச்வதமான மோக்ஷத்தையடைகிறான்.

அத்யயனம் ஆரம்பிப்பதற்கு முந்தி குருவுக்குத் தக்ஷிணை கொடுக்கக்கூடாது. முடிவில் தான் விவாஹஞ்செய்துகொள்ள அவரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொள்ளும்பொழுது பூமி, ஸுவர்ணம், பசு, குதிரை, பாதரக்ஷை, குடை, ஆஸனம், தான்யம், ஈரி, வஸ்த்ரம் முதலிய அவர் விரும்பிய பொருள்களைத் தக்ஷிணையாகக்கொடுத்து அவரைத் திருப்திசெய்யவேண்டியது. நைஷ்டிக ப்ராஹ்மசாரியானவன், தன் குரு இறந்துவிட்டால் அவருடைய குணமுள்ள புத்ரனிடத்திலாவது, பத்னியிடத்திலாவது, ஞாதியினிடத்திலாவது, தன் தேஹமுள்ளவரையில் பணிவிடை செய்துகொண்டு வஸிக்கலாம். அவர்களுமில்லாவிடில், தன்னாசார்யன் ஹோமஞ்செய்துவந்த ஹோமகுண்டத்திற்கு ஸமீபத்தில் உட்கார்ந்து, ஸமித்களால் ஒவ்வொருதினமும் ஹோமஞ்செய்து காலத்தைக் கழிக்கவேண்டியது. மேற்சொன்னபடி மூன்று வேதங்களை ஓதுவதற்காகக் குருவினிடத்தில் முப்பத்தாறு அல்லது பதினெட்டு அல்லது ஒன்பது வர்ஷங்கள் வரையிலாவது, அல்லது ஓதி வருகிறவரையிலாவது ப்ராஹ்மசர்யவ்ரதத்தை யனுஷ்டிக்கவேண்டியது. தன் வேதத்தை முன்னிட்டு மூன்று வேதங்களையாவது, இரண்டு வேதங்களையாவது, அல்லது தன் வேதத்தையாவது ப்ராஹ்மசர்யவ்ரதம் வழுவாமல் ஓதிக் கிருஹஸ்தாச்ரமத்தையடையவேண்டியது

பிதாவினிடத்திலாவது, அவரில்லாதபக்ஷத்தில் ஆசார்யனிடத்திலாவது, விதிப்படி வேதமோதி முடிந்த புத்ரனை, அல்லது சிஷ்யனைப் பிதா அல்லது ஆசார்யன், புஷ்பம் சந்தனம் முதலியவைகளால் அலங்கரித்து, உயர்ந்த ஆஸனத்தில் உட்கார

வைத்துக் கோதானவ்ரதம்செய்வித்துப் பஞ்சாமிருதத்தினால் உபசரிக்கவேண்டியது. இது **ஸமாவர்த்தனம்**.—(மனுஸ்மிருதி. 2.)

கிருஹஸ்த தர்மம். ஸமாவர்த்தனஞ் செய்யப்பட்ட ப்ரஹ்மசாரியானவன், குரு அல்லது பிதாவின் அனுமதி பெற்றுக்கொண்டு, சாஸ்த்ரங்களிற்சொல்லிய லக்ஷணங்கள் பொருந்தின ஒரு பெண்ணை விவாஹஞ்செய்துகொள்ளவேண்டியது.

தந்தை, கணவன், உடன்பிறந்தார், மைத்துனர் இவர்களுடைய க்ஷேமத்தை விரும்பினால், ஸ்த்ரீகளை விவாஹகாலத்திலும், பின்னும் பூஷணங்கள் முதலியவைகளால் ஸந்தோஷப்படுத்த வேண்டியது. எந்தவீட்டில் ஸ்த்ரீகள் ஸந்தோஷத்தையடைகின்றார்களோ அங்கே ஸகலதேவதைகளும் ஸந்தோஷத்துடன் வஸிக்கின்றன. அப்படியில்லாவிட்டால் அங்கேசெய்கிற ஸகலசார்யங்களும் பலமில்லாமற்போகும். எந்த வம்சத்தில் உடன்பிறந்தாள் முதலியவர்கள் ஆடையாபரணங்களில்லாமல வ்யஸனப்படுகின்றார்களோ, அந்தக் குலம் நசித்துப்போகிறது. பிதா முதலியவர்கள் தங்களையுபசரிக்காததால், “இந்தக் குலம் அழிந்துபோகக்கடவது” என்று ஸ்த்ரீகள் சபித்ததால், அந்தக் குலம் சூன்யம் வைக்கப்பட்டதுபோல் நசித்துவிடும். ஆகையால் க்ஷேமத்தைக் கோருகிறவர்கள் எப்போதும் தங்கள் வீடுகளில் நடக்கும் வ்ரதங்கள், விவாஹங்கள் முதலிய விசேஷகாலங்களில் ஸஹோதரி முதலியவர்களை வஸ்த்ரம், பூஷணம், அன்னம், புஷ்பம் முதலியவைகளால் ஸந்தோஷப்படுத்தவேண்டியது. எந்த வீட்டில் பார்யையினுடைய சுச்ருஷை முதலியவற்றால் பர்த்தா பரஸ்த்ரீயை நினைக்காமலும், பர்த்தாவினுடைய அன்பு முதலியவற்றால் பார்யை பரபுருஷனை நினைக்காமலும் ஒருவர்க்கொருவர் ப்ரியமாயிருக்கின்றார்களோ அந்தக் குலத்தில் மங்களங்கள் எப்பொழுதும் நடக்கின்றன. பார்யை ஆடையாபரணங்களால் ப்ரகாசியாமற்போனால் பர்த்தாவை ஸந்தோஷப்படுத்தமுடியாது. அதனால் குலம் விருத்தியாகாது. காலக்ரமத்தில் அவள் பரபுருஷனைக்கூடுவாள்; குலம நசிக்கும்.

அந்தந்த ஜாதிக்குத்தகாத விவாஹம் செய்வதாலும், ஸம்ஸ்காரங்கள், வேதாத்யயனம், பெரியோர்களுடைய பூஜை முதலியவைகளில்லாமற்போவதாலும், சித்ரவேலை செய்வதாலும், வ்யவஹாரம் செய்வதாலும், சூத்ரஸ்த்ரீயைமாத்ரம் விவாஹம்செய்து புத்ரர்களைப்பெறுவதாலும், பசு, குதிரை, வண்டி இவற்றை விற்பனைசெய்வதாலும், பயிரிடுவதாலும், ராஜஸேவையாலும், தகாதவர்களுக்கு யக்ஞம் அத்யயனம் முதலியவைகளைச் செய்விப்பதா

லும், தைவத்தை ஒப்புக்கொள்ளாமையாலும், தங்களுக்குரிய மந்த்ரங்களை யனுஷ்டிக்காமையாலும், உத்தமமான குலமும் இழிவையடைகிறது. மேற்சொல்லிய தோஷங்களில்லாத குலம் ஸ்வல்ப ஐச்வரியமுள்ளதானாலும் உயர்ந்த குலத்திற்கு ஸமமாயும், கீர்த்தியையுண்டுபண்ணக்கூடியதாயுமாகும்.

விவாஹமானபிறகு க்ருஹஸ்தன், வைதிகாக்னியில் தன் ஸூத்ரத்திற்சொல்லிய ஔபாஸனம் முதலிய கர்மங்களை விதிப்படி நடத்திப், பஞ்சமஹாயக்ஞத்தில் சேர்ந்த வைச்வதேவத்தை நாள்தோறும் நடத்தவேண்டியது. அவன், எந்திரம், முறம், அம்மி, துடைப்பம், உரல், உலக்கை, தண்ணீர்க்குடம் இவைகளையும் உபயோகப்படுத்துவதால் அவனுக்கு ஐந்துசொலைகள் உண்டாகின்றன. அவைகளை நீக்குவதற்காகத் தினந்தோறும் ஐந்து மஹாயக்ஞங்கள் ஏற்பட்டன. அவை, வேதமோதுதல் (ப்ரஹ்மயக்ஞம்), அன்னத்தினாலாவது ஜலதர்ப்பணத்தினாலாவது பிதிருக்களைத் திருப்திசெய்தல் (பித்ருயக்ஞம்), தேவதைகளைக் குறித்து அக்னியில் ஹோமஞ்செய்தல் (தேவயக்ஞம்), வாயஸபலி முதலியவைகளை வைத்தல் (பூதயக்ஞம்), அதிதிகளைப் பூஜித்தல (மனுஷ்யயக்ஞம்). இவைகளுக்கே அஹுதம், ப்ராசிதம், ஹுதம், ப்ரஹுதம், ப்ராஹ்மயஹுதம் என்றும்பெயர். சிலவேளை தரித்ரத்தால் மனுஷ்யயக்ஞம் பண்ணுவதற்குச் சக்தியில்லாவிட்டாலும் ப்ரஹ்மயக்ஞத்தையும் தேவயக்ஞத்தையும் தவறாமற் செய்யவேண்டியது.

தேவயக்ஞத்தால் ஸ்தாவரஜங்கமங்களை ரக்ஷிக்கிறான். தேவர்களைக் குறித்து அக்னியில் செய்யப்படுகிற ஹோமங்கள் ஸூர்யனையடைகின்றன. அவரிடத்திலிருந்து மழையும் அதனால் தான்யங்களும் உண்டாகின்றன. அதனால் ஜீவகோடிகள் விருத்தியடைகின்றன. ஸர்வ ஜந்துக்களும் ப்ராணவாயுவையடைந்து எப்படி ஜீவிக்கின்றனவோ அப்படியே ப்ரஹ்மசாரி, வானப்ரஸ்தன், ஸன்யாஸி இம்மூவரும் க்ருஹஸ்தனையனுஸரித்து ஜீவிக்கிறார்கள். வேதத்தை ஓதுவிப்பதாலும் பிக்ஷைபோடுவதாலும் மற்ற மூன்றாச்ரமத்தார்களையும் காப்பாற்றுவதாலும் க்ருஹஸ்தாச்ரமம் மேலானது. இந்த லோகத்தில் ஸுகத்தையும் இறந்தபின் அழிவில்லாத புண்யலோகங்களையும் விரும்புகிறவன், க்ருஹஸ்தாச்ரமத்தை முயற்சியுடன் காப்பாற்றவேண்டியது. வேதாத்யயனத்தால் ரிஷிகளையும், ஹோமத்தால் தேவர்களையும், ச்ராத்தத்தால் பிதிருக்களையும், போஜனத்தால் அதிதிகளையும், பலிகளால் பூதங்களையும் திருப்திசெய்யவேண்டியது.

தினந்தோறும் செய்யும் பித்ருயக்ஞத்தை அன்னத்தாலாவது, ஜலதர்ப்பணத்தாலாவது, பால் கிழங்கு பழம் முதலியவைகளாலாவது, பித்ருக்களின் ப்ரீதியின்பொருட்டுச் செய்யவேண்டியது. அப்பொழுது ஒரு ப்ராஹ்மணனையாவது பூஜிப்பிக்கவேண்டியது.

பூதயக்ஞத்தில் ஒருவனையும் பூஜிப்பிக்கவேண்டியதில்லை. பலி மாத்ரம் போடவேண்டியது. வைச்வதேவத்திற்காகச் சமையல் செய்யப்பட்டிருக்கிற அன்னத்தை லௌகிகாக்னியில் நாள்தோறும் அக்னி, சுக்ரன், அக்னிஷோமர்களுக்கொன்றாகவும்; விசவேதேவர்கள், தன்வந்தரி, குஹூ, அனுமதி, ப்ரஜாபதி, ஆகாசம், பூமிகளுக்கொன்றாகவும்; முடிவில் ஸ்விஷ்டக்ருது என்னும் அக்னிக்கும் ஹோமஞ் செய்யவேண்டியது. அப்பொழுது அந்தந்தத் தேவதைகளை த்யானிக்கவேண்டியது. பின்பு கிழக்கில் இந்த்ரனுக்கும் அவனுடைய பரிஜனங்களுக்கும், தெற்கில் யமனுக்கும் அவனுடைய பரிஜனங்களுக்கும், மேற்கில் வருணனுக்கும் அவனுடைய பரிஜனங்களுக்கும், வடக்கில் ஸோமனுக்கும் அவனுடைய பரிஜனங்களுக்கும், வரிசையாய்ப் பூமியில் பலிவைக்கவேண்டியது. வீட்டின் வாசற்படியில் தேவர்களுக்கும், ஜலத்தில் ஜலதேவதைகளுக்கும், உரல் உலக்கை இரண்டிலாவது அல்லது ஒன்றிலாவது வனதேவதைகளுக்கும், தன் வீட்டின் வடகிழக்கிலாவது தன் சயனத்தின் தலைப்பக்கத்திலாவது லக்ஷ்மிக்கும், தன்வீட்டின் தென்மேற்கிலாவது அல்லது தன் சயனத்தின் காலபாகத்திலாவது பத்ரகாளிக்கும், வீட்டின் நடுவில் ப்ரஹ்மனுக்கும் வாஸ்துபுருஷனுக்கும், முற்றத்தில் ஆகாசத்தில் விசவேதேவர்களுக்கும் பகலில் ஸஞ்சரிக்கும் ப்ராணிகளுக்கும் இரவில் ஸஞ்சரிக்கும் ப்ராணிகளுக்கும்; மெத்தை மேலாவது தனது பின்பக்கத்திலாவது ஸர்வாத்மாயமிக்கும் பலிவைக்கவேண்டியது. மிகுந்த எல்லா அன்னத்தையும் தெற்கு முகமாய்க் காலைமடித்துக்கொண்டு பூமியில் பித்ருக்களுக்கு பலி வைக்கவேண்டியது. வீட்டிற்காகச் சமையல் செய்திருக்கிற அன்னத்தில் கொஞ்சமெடுத்து நாய், பதிதன், சண்டாளன், தீராவ்யாதியுள்ளவன், காக்கை, புழு இவைகளுக்குச் சுத்தமான பூமியில் பலிவைக்கவேண்டியது.

இப்படிப் பூதயக்ஞத்தைச் செய்து, பின்பு அதிதியைப் பூஜிக்கவேண்டியது. ப்ரஹ்மசாரிகளுக்கும், ஸன்யாஸிகளுக்கும் நல்ல வார்த்தை சொல்லுதல், கால்கழுவுதல் முதலிய உபசாரத்தோடு பிக்ஷையிட்டு அவர்கள் கையில் ஜலம்விடவேண்டியது. தன்னுடைய ஆசார்யனுக்கு ஒரு பசுவை ஸுவர்ணபூஷணத்தாலலங்கரி

த்துத்தானஞ்செய்தால் எந்தப்புண்யமடையப்படுகிறதோ அதை ப்ராஹ்மசாரி முதலானவர்களுக்கு விதிப்படி பிக்ஷையிடுவதால் கிருஹஸ்தனடைகிறான். அதிகமாகப் பிக்ஷைகொடுப்பதற்குச் சக்தியில்லாதவன் ஒரு கவளத்திற்குக்குறையாத அன்னத்தையும், தாஹத்திற்குத்தீர்த்தத்தையும், தன் வீட்டிலுள்ள பதார்த்தங்களையும் வேதத்தையும் வேதார்த்தத்தையும் அறிந்த ப்ராஹ்மணனுக்கு விதிப்படி பூஜித்துக்கொடுக்கவேண்டியது. அப்படியில்லாதவனுக்குத் தேவதைகளையும் பிதிருக்களையுங்குறித்துத் தெரியாமையால் கொடுக்கப்பட்ட தானங்கள் சாம்பலிற்செய்த ஆஹுதி போல் நசித்துப்போய்விடுகின்றன. கல்வி, தவம் இவைகளுள்ள ப்ராஹ்மணர்களுக்குக் கொடுக்கப்பட்ட தானங்கள் அக்னியிற் செய்த ஹோமத்தைப்போல ப்ரகாசிக்கின்றன; பின்னும இந்த லோகத்தில் வ்யாதி, சத்ரு, ராஜபீடை இவற்றாலுண்டான பயத்தினின்றும், இறந்தபிறகு நரகத்தினின்றும் காப்பாற்றுகின்றன. தன் வீட்டிற்கு ஸ்வயமாக வந்த அதிதிக்குக் காலுக்குத்தண்ணீர் கொடுத்து, ஆஸனத்தில் உட்காரவைத்துத் தன் வீட்டிலிருக்கும் பதார்த்தங்களுடன் அன்னமிட்டு விதிப்படி உபசாரஞ்செய்ய வேண்டியது. தினந்தோறும் கழனியிற்சிந்தின நெல்லுக்கதிர்களைப் பொறுக்கிக்கொண்டுவந்து அதனால் ஜீவித்தாலும், பஞ்சாக்னி மத்தியில் தபஸ்செய்தாலும், அதிதியாக வந்த ப்ராஹ்மணனுக்கு அன்னமிடாவிட்டால் மேற்சொன்ன புண்யத்தையெல்லாம் அவனபஹரித்துக்கொண்டு போய்விடுவான். அதிதிகளுக்கு அன்னமிடச்சக்தியில்லாவிட்டாலும் கிருஹஸ்தன் தருபவானுறல் படுக்கை, இளைப்பாறுமிடம், தாஹத்திற்குத் தீர்த்தம், ப்ரியவசனம் இவைகள் இல்லாமல் போகாது. ஓர் ராத்ரிமாத்ரம் புதிதாய் வீட்டிலிருப்பவனை அதிதியாய் நினைக்கவேண்டியது. நாள்தோறும் வராமல் ஏதோ ஒரு காலத்தில் வருகிறவனுக்கு அதிதியென்று பெயர். தன்னூரிலிருப்பவனும், பிழைப்புக்காக விகடஞ்செய்கிறவனும், பத்னியோடிருப்பவனும, வைசவதேவ காலத்தில் தன் வீட்டுக்குவந்தபோதிலும் அவர்களை அதிதியாக நினைக்கக்கூடாது. எந்தக்கிருஹஸ்தர்கள் தங்களுக்கு மனைவி முதலானவர்களிருப்பினும், போஜன விருப்பத்தால் அயலூரில் ஒருவன் வீட்டு அன்னத்தைப் புஜிக்கிறார்களோ, அவர்கள் மறுபிறப்பில் மாடாய்ப் பிறந்து அன்னம் போட்டவர்களுக்கு உழைக்கிறார்கள். இரவில் போஜனகாலத்தில் வந்தாலும் பின்பு வந்தாலும், வந்த அதிதியை ஸமயந்தப்பிப்போயிற்றென்று அன்னம போடாமல அனுப்பக்கூடாது. தயிர் பால் நெய் முதலிய எந்த உயர்ந்த

பதார்த்தத்தை அதிதிக்குப் பரிமாறவில்லையோ அதைத்தானும் புசிக்கக்கூடாது. அதிதிக்கு அன்னமிட்டால் அது பொருளையும், கீர்த்தியையும், ஆயுளையும், புண்ய லோகத்தையும் கொடுக்கும். ஆஸனம், இளைப்பாறுமிடம், கட்டில் முதலிய படுக்கை, பின்தொடர்தல், பணிவிடை, இவ்வித உபசாரங்களை உயர்ந்தவர்களுக் குயர்ந்ததாகவும், தாழ்ந்தவர்களுக்குத் தாழ்ந்ததாகவும், ஸரியானவர்களுக்கு ஸரியாகவும் செய்யவேண்டியது. வைச்வதேவகாலத்தில் வந்த அதிதிக்குப் போஜனமளித்தபின்பு, மற்றும் அதிதிகள்வந்தால், அவர்களுக்கும் பூமியில் வைத்திருக்கும் பூதபலியன்னத்தைப்படைக்காமல், வேறன்னத்தைத் தன் சக்திக்குத்தக்கபடி படைக்கவேண்டியது.

தன்னையொருவன் போஜனத்துக்கு அழைக்கும் நிமித்தமாகத் தன் குலகோத்ரங்களைத் தானே சொல்லிக்கொள்ளக்கூடாது. ப்ராஹ்மணனுக்கு க்ஷத்ரியன் வைசயனும், க்ஷத்ரியனுக்கு வைசயசூத்ரர்களும், வைசயனுக்குச் சூத்ரனும், தாழ்ந்தஜாதியானதானும், தோழன், பங்காளி இவர்கள் தன பந்துக்களாதலாலும், ஆசார்யன் தனக்கு யஜமானனாதலாலும், இவர்களுக்குப் பூஜைசெய்வது அதிதிபூஜையாகமாட்டாது. ஒருவேளை அன்யதேசத்திலிருந்து ஒரு க்ஷத்ரியன் அதிதியாகவந்தால், ப்ராஹ்மணஅதிதி புஜித்தபின்பு அவனையும் புஜிப்பிக்கவேண்டியது. வைசயன, சூத்ரன, இவர்கள ப்ராஹ்மணனுடைய வீட்டிற்கு அதிதியாக வந்தாலும் தன் பரிசாரகர்கள் சாப்பிடும்போது அவர்களையும் புஜிப்பிக்கவேண்டியது. தோழன் முதலானவர்கள அன்புடன் தன் வீட்டுக்குப போஜனவேளையில் வந்தால், அவர்களைப் பூஜித்துத தன் சக்திக்குத்தக்கபடி தன்னோடு புஜிப்பிக்கவேண்டியது புதிதாக விவாஹமானமருமகள், விவாஹமாகாதபெண்கள், நோயாளி, காப்பிணிகள், இவர்களைத் தேவபூஜை செய்தவுடனே அதிதிகளுக்குமுன்னமே யோசியாமல் சாப்பிடச் சொல்லவேண்டியது. எவன் இப்போது சொல்லிவந்த விதிப்படி அதிதிமுதல் பரிசாரகர்களவரையில் முன்னம் அன்னம்போடாமல தான் முந்திப் புஜிக்கிறானோ, இறந்தபின் அவனுடைய தேஹத்தை நாய, கழுகு தின்கின்றன. ஆகையால் அதிதிகளும பரிசாரகர்களும் சாப்பிட்டுமிகுந்த அன்னத்தைத் தானும் தன்மனைவியுஞ் சாப்பிடவேண்டியது. தன் வீட்டில் சமையலான பதார்த்தத்தைக் கிருஹதேவதைக்கு நிவேதனஞ்செய்து, தேவர்கள் ரிஷிகள அதிதிகள் பிதிருக்களுக்கு முன்னம் பூஜைசெய்து, மிகுந்த அன்னத்தைக் கிருஹஸ்தன் புஜிக்கவேண்டியது.

அரசன், ரித்விக், வ்ரதாநுஷ்டானமுள்ள ப்ராஹ்மணன், குரு, தோழன், மாமனார், அம்மான், இருவர்ஷமானபின்பு தன்வீட்டிற்கு வந்தால் மதுபர்க்கத்துடன் பூஜிக்கத்தக்கவர்கள். ஆனால் அரசனும் வ்ரதாநுஷ்டானமுள்ள ப்ராஹ்மணனும், ஒருவர்ஷத்திற்குமேல் தான் யாகஞ்செய்யுங்காலத்தில வந்தால்மாத்ரம் மதுபர்க்கத்தால் பூஜிக்கத்தக்கவர்கள். மற்றவர்கள் யாககாலத்திலல்லாமலும் ஒரு வர்ஷத்துக்குமேல் வந்தால மதுபர்க்கத்தாலேயே பூஜிக்கவேண்டியது.

இரவில் சமையலான அன்னத்தால் பாரையைக்கொண்டு மந்த்ரமில்லாமல் பலியைமாத்ரம் வைக்கவேண்டியது. இதற்குராத்ரிவைசவதேவமென்று பெயர். அமாவாஸ்யாதினத்தில பிண்டபிதிருயக்ஞம் செய்து முடித்தபிறகு அன்றையதினம செய்யவேண்டிய சராத்தத்தை விதிப்படி அன்னத்தால செய்யவேண்டியது.

வாஷரிதுவில் புரட்டாசிமாஸம க்ருஷ்ணபக்ஷத்ரயோதசியில் தேனாலும பாயஸத்தாலும சராத்தஞ் செய்தால் பிதிருக்களுக்கு அக்ஷயமான திருப்தி யுண்டாகும. "நம்முடைய வம்சத்தில் மேற்சொன்ன த்ரயோதசியில பின்பகலில் தேன் நெய் பாயஸங்களுடன் நமக்கு சராத்தஞ் செய்பவன் பிறப்பானா" வென்று பிதிருக்கள் ஆசைப்படுகிறார்கள்.

க்ருஹஸ்தன், ஆபத்தில்லாத காலத்தில ப்ராணிகளுக்குத்ரோஹமில்லாமல் யக்ஞம, அத்யயனம இவைகளை செய்வித்தல், நல்லபொருளைத் தானமவாங்குதல முதலிய விருத்திகளால் ஜீவிக்கவேண்டியது. அப்படிக்கு முடியாதபோது ஸ்வல்ப தோஷமுள்ள பயிரிடுவது, வ்யாபாரம முதலியவற்றாலாவது தனது குடும்பத்தைப் போஷிக்கவேண்டியது. சாஸ்த்ரப்படி தனது குடும்பத்தையும ப்ராணனையும ரக்ஷிப்பதற்கு உபயோகமான தனதான்யங்களை உலகத்தாரால நிந்திக்கப்படாததும், சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டதுமான ரிதம், அமிருதம், மிருதம், ப்ரமிருதம், ஸத்யாந்ருதம் என்ற ஐந்தினாலும ஸம்பாதிக்கலாம். ச்வான விருத்தியால் ஆபத்திலலாதபோது ஒருக்காலும் ஜீவிக்கக்கூடாது. கழனியிலும் மற்றவிடத்திலும் சிந்தினநெல்லை இரண்டு விரல்களால் பொறுக்குவதும, மேற்சொன்னவிடங்களில் கதிர்நெல்லைப் பொறுக்குவதும் ரிதம் என்றும்; தான் யாசிக்காமலே கிடைத்ததைப் பெற்றுக்கொள்வது அமிருதம என்றும; தான் யாசிப்பது மிருதமென்றும்; பயிரிடுவது ப்ரமிருதமென்றும்; வ்யாபாரஞ்செய்வது ஸத்யாந்ருதமென்றும சொல்லப்படும். ப்ராஹ்மணன் இவைகளால் ஜீவிக்கலாம. ஸேவகவிருத்தியானது பிறரைத தீனயாய்

ப்பார்த்து, அவர்கள் அதட்டும்போது அதற்குட்பட்டு, அவர்களிட்ட இழிவான வேலைகளைச் செய்யவேண்டியிருப்பதால், (ச்வாவிருத்தி) நாயின்பிழைப்பென்று சொல்லப்படும். ஆகையினால் ப்ராஹ்மணன் அதை விலக்கவேண்டியது. ப்ராஹ்மணஜாதிகிருஹஸ்தன் மூன்று வர்ஷங்கள் வரையிலாவது அதிகமாயாவது போதுமான தான்யத்தைக் களஞ்சியத்திற்போட்டு வைத்துக்கொள்ளலாம். அவ்வளவு சக்தியில்லாதவன் ஒரு வர்ஷத்திற்குக் குறையாமலிருக்கத்தக்க தான்யத்தைச் சாவிவிட்டு வைத்துக்கொள்ளலாம். அதற்கும் சக்தியில்லாதவன் மூன்றுநாள்களுக்குப்போதுமான தான்யத்தை வைத்துக்கொள்ளலாம். அல்லது நாள்தோறும் சம்பாதித்துக் கொள்ளுகிறவனாகவாவது இருக்கலாம். அவன் பெரிய குடும்பியோ அவன் ரிதம், அம்ருதம, ம்ருதம், ப்ரம்ருதம, ஸத்யாந்ருதம், குஸீதம் (வட்டிவாங்குதல்) இவ்வாறினாலும ஜீவிக்கலாம. அவனுக்குக் குறைந்த ஸமஸாரி, யக்ஞம் செய்வித்தல், ஓதுவித்தல, தானம்வாங்குதல் இம்மூன்றினாலும் ஜீவிக்கலாம. அதிலுங்குறைந்த ஸமஸாரி, யக்ஞம செய்வித்தல் ஓதுவித்தல இவ்விரண்டினாலும் ஜீவிக்கலாம். அதிலுங்குறைந்தவன் ஓதுவித்தலினால மாத்ரம ஜீவிக்கலாம். ரிதவிருத்தியினால் ஜீவிக்கிறவன் ஏழையாயிருப்பானாதலால், அக்னிஹோத்ரத்தில் விருப் முள்ளவனாய்த் தர்ச, பௌர்ணமாஸ, ஆக்ராயண இஷ்டிகளைமாத்ரம சாதிக்கத்தக்கபடி செய்யவேண்டியது.

பிழைப்புக்காக விகடஞ்செய்யவும் துஷ்டவார்த்தை சொல்லவுங்கூடாது. பொய், டம்பம, கோபம் இவைகளில்லாத ப்ராஹ்மணவிருத்தியைத்தேடிப் பிழைக்கவேண்டியது. அவனவன் வர்ணாச்ரமங்களுக்குத் தக்கபடி வேதத்திலும தர்மசாஸ்த்ரத்திலும சொல்லப்பட்டிருக்கிற நித்யகாமயங்களை நாளதோறும் சோம்பலில்லாமல் செய்யவேண்டியது. அவைகளைச் செய்கிறவன் மேலானகதியையடைகிறான். பாட்டுப்பாடுவது, கூத்தாடுவது, யாகஞ்செய்யத்தகாதவனுக்கு யாகஞ்செய்விப்பது முதலிய சாஸ்த்ரவிருத்தமான கர்மத்தினால் பொருளைத் தேடக்கூடாது. பொருளிருந்தாலும், இல்லாமற்போனாலும், பதிதன முதலானவர்களிடத்தில தன் ஜீவனத்துக்காகத் தானம் வாங்கக்கூடாது. இந்த்ரிய விஷயங்களில அதிகவிருப்பம் வைக்கக்கூடாது. தன் மனைவியானாலும் சாஸ்த்ரவிரோதமாய்க் காமசேஷ்டைகளை நடத்தக்கூடாது. சில ஸமயங்களில் விஷயேச்சை அதிகமாயிருந்தாலும் அதனால் வரும் அல்பஸுகத்தையும் ஸ்வர்க்காதி புண்யலோகங்களின் நாசத்தையும் மனஸால் நினைத்து அதையடக்கவேண்டியது.

வேதார்த்தசிந்தனைக்கு விரோதமான எல்லா வ்யாபாரங்களையும் நீக்கி எவ்விதமாயாவது ஜீவித்துக்கொண்டு வேதத்தை ஓதவேண்டியது. அதே இவனுக்கு ப்ரயோஜனத்தை யுண்டு பண்ணும. வயஸ், யாகாதிகார்யம், பொருள், குலம், இவைகளுக்குத் தகுந்தவேஷம், வார்த்தை, புத்திகளைத் தரித்துக்கொண்டு லோகத்தில் ஸஞ்சரிக்கவேண்டியது. புத்தியை விருத்தி பண்ணும் வ்யாகரணம், மீமாம்ஸை, ஸ்மிருதி, புராணம், தர்க்கம் இவைகளையும், பொருள் ஸம்பாதிப்பதற்குபயோகமான பார்ஹஸ்பத்யம், ஔசனஸம் முதலிய அர்த்தசாஸ்த்ரங்களையும் இம்மைக்குபயோகமான ஜ்யோதிஷ வைத்யசாஸ்த்ரங்களையும், மறுமைக்குபயோகமான வேதாந்தசாஸ்த்ரங்களையும் நாள்தோறும் அப்யஸிக்கவேண்டியது.

யக்ஞசாஸ்த்ரமறிந்த சிலபெரியோர்கள ஆசையொழிந்தவர்களாய்ப் பஞ்சமஹாயக்ஞங்களை மேற்சொன்னபடி செய்யாமல் பஞ்சஞானேந்திரியங்களைக்கொண்டு செய்கிறார்கள. (அதாவது, ஞானத்தினால் யக்ஞதேவதையான பரமாத்மாவை த்யானித்து அதன் பலத்தையடைகிறார்கள்.) சிலர் யக்ஞத்தின்பயன் வாக்கினாலும் ப்ராணவாயுவினாலும் அழிவற்றதாக உண்டாகிறதென்றறிந்து, ப்ராணனை வாக்கிலும் வாக்கை ப்ராணனிலுமடக்கி யக்ஞபலத்தை யடைகிறார்கள். (மௌனவ்ரதத்தினாலும் மந்த்ரோச்சாரணத்தினாலும் அடைகிறார்களென்பது கருத்து.) சிலர் ஸகல கர்மபலங்களும் ப்ரஹ்மஞானத்தாலுண்டாகிறதென்று ஞானக்கண்ணாலறிந்து ஞானத்தினால் பஞ்சயக்ஞபலனை யடைகிறார்கள்.

காலையிலும் மாலையிலும் அக்னிஹோத்ரத்தையும், அமாவாஸ்யையில தர்ச இஷ்டியையும், பௌர்ணமியில் பௌர்ணமி இஷ்டியையும, கார்த்திகைமாஸத்தில் ஆக்ரயண இஷ்டியையும், ரிதுவின்முடிவில சாதுர்மாஸ இஷ்டியையும், தக்ஷிணாயண உத்தராயணங்களில் பசுவத இஷ்டியையும், சாந்த்ரமானப்ரகாரம் ஒரு வர்ஷம் முடிந்து மறுவர்ஷமாரம்பிக்கும்போது வஸந்தகாலத்தில அக்னிஷ்டோமத்தையும் செய்யவேண்டியது. ப்ராஹ்மணன் தீர்க்காயுஸுள்ளவனாயிருக்கவேண்டுமென்று விரும்பினால் புதிதாக நெலவிளைந்து வந்தவுடன் ஆக்ரயண இஷ்டி செய்யாமல் அதைப் புஜிக்கக்கூடாது. அப்படிச் செய்யாவிடில் இவன் ஹோமஞ்செய்யும் அக்னிகள இவனுடைய ப்ராணனையே புஜிக்கயத்னிக்கின்றன.

வீட்டில்வந்த அதிதியானவன் க்ருஹஸ்தனால் பூஜிக்கப்படாமலிருக்கக்கூடாது. வேதத்தை கம்பாதவர்கள், தகாதகாயத்

தைச் செய்பவர்கள், பூனையைப்போல வேஷந்தரித்துப் பிறரை வஞ்சிப்பவர்கள், வேதாந்த விரோதமான தர்க்கயுக்திகளைச் சொல்லுகிறவர்கள், கொக்குப்போல் மோசக்கருத்துள்ளவர்கள்: அதிதி பூஜாகாலத்தில வந்தாலும் அவர்களை வார்த்தைகளாலும் பூஜிக்கலாகாது. வேதமோதினவர்கள், வ்ரதமனுஷ்டித்தவர்கள், இவ்விரண்டிலக்ஷணமுமுள்ளவர்கள், ச்ரோத்ரியர்கள் முதலிய க்ருஹஸ்தர்களைத் தேவகார்யத்திலும், பித்ருகார்யத்திலும் பூஜிக்கவேண்டியது. இதற்கு வேறுபட்டவர்களை நீக்கவேண்டியது ப்ரஹ்மசாரி, ஸந்யாஸி முதலான பிக்ஷைக்காரர்களுக்குத்தன் சக்திக்குத்தக்கபடி குடும்பத்திற்கு விரோதமில்லாமல் பிக்ஷைபோட்டு, தனக்குபயோகமாகிற வ்ருக்ஷமுதலானவற்றிற்கும் ஜலத்தினால் திருப்திசெய்யவேண்டியது.

கர்மானுஷ்டானமுள்ள க்ருஹஸ்தனுக்கு அன்னவஸ்த்ரமில்லாமல் கஷ்டம்நேரிட்டால், அவன் க்ஷத்ரியஜாதி அரசனிடத்திலாவது, தன்னிடத்தில் யாஜநம் செய்துகொண்டவனிடத்திலாவது, தன் சிஷ்யனிடத்திலாவது, பொருளை ஸம்பாதித்துக்கொள்ளவேண்டியது. அவர்களிருக்கும்போது மற்றவர்களிடத்தில் தானம் வாங்கக்கூடாது க்ருஹஸ்தன் வேதவித்யையினாலும், தானம் வாங்குவதாலும், பொருள் ஸம்பாதிக்காமல் பசியினால் துன்பப்படக்கூடாது. ஐச்வர்யமிருக்கும்போது கிழிந்தும் அழுக்குள்ளதாயுமிருக்கிற வஸ்த்ரத்தையுடுத்திக்கொள்ளக்கூடாது. மயிர், நகம், மீசை, தாடிகளை விதிப்படி க்ஷவரஞ்செய்துகொண்டு, வ்ரதோபவாஸமுள்ளவனாய், உள்ளும் புறமும் பரிசுத்தனாய், அழுக்கில்லாத வஸ்த்ரத்தைத்தரித்துக்கொண்டு வேதாத்யயனமுள்ளவனாய்ச் சரீரபோஷகமான ஔஷதங்களைப் புஜிக்கவேண்டியது. மூங்கிலதண்டம், தீர்த்தகமண்டலு, யக்ஞோபவீதம் தர்ப்பை, பவித்ரம், ஸ்வர்ணகுண்டலம் இவைகளை எப்போதுந் தரிக்கவேண்டியது. ஸூர்யன் உதிக்கும்போதும், அஸ்தமிக்கும்போதும், க்ரஹணம் பிடித்திருக்கும்போதும், ஜலத்தில் ப்ரதிபிம்பித்திருக்கும்போதும், உச்சியிலிருக்கும்போதும் பார்க்கலாகாது. கன்றுக்குட்டியைக் கட்டுங்கயிற்றைத் தாண்டக்கூடாது. மழை பெய்யும்போது ஓடக்கூடாது. ஜலத்தில் தன் ரூபத்தைப் பார்க்கக்கூடாது. மார்க்கத்தில் போகும்போது மண்மேடு, பசுமாடு, தைவம், ப்ராஹ்மணன், நெய்க்குடம், தேன்குடம், நாற்சந்தி, அரசுமுதலிய புண்யவ்ருக்ஷங்கள் நேரிட்டால் அவைகளை ப்ரதக்ஷிணமாகப் போகவேண்டியது.

மிகவும் காமாதுரனுயிருந்தாலும் மனைவிருதுவாய் மூன்று நாளைக்குள்ளே புணரக்கூடாது. புணராவிட்டாலும் அவளுடன் படுக்கையில் படுக்கவுங்கூடாது. மனைவி மாதவிடாயாயிருக்கும் போது அவளைச்சேருகிறவனுக்கு ஞானம், தேஜஸ், பலம், நேத்ரம், ஆயுஸ் இவைகள் குறைகின்றன; இதை விலக்குகிறவனுக்கு மேற்சொன்னவைகள் விருத்தியடைகின்றன. தன் பார்யையுடன் ஒரே பாத்ரத்தில் புஜிக்கக்கூடாது. அவள் சாப்பிடும் போதும், இரும்பும்போதும், கொட்டாவி விடும்போதும், தன்னிஷ்டப்படி உட்கார்ந்திருக்கும்போதும், கண்ணுக்கு மையிட்டுக் கொள்ளும்போதும், எண்ணெதேய்த்துக்கொள்ளும்போதும், மேலவஸ்திரமில்லாதபோதும், ப்ரஸவிக்கும்போதும் தேஜஸை விரும்பினவன் அவளைப் பார்க்கக்கூடாது.

*கிருஹஸ்தன் ஒரே வஸ்த்ரத்துடன் அன்னத்தைப்புஜிக்கக் கூடாது. வஸ்த்ரமில்லாமல் ஸ்நாநம்செய்யக்கூடாது. மார்க்கம், சாம்பல, மாட்டுத்தொழுவம், உழுதநிலம், ஜலம், யாகசாலை, பாழுங்கோயில், புற்று, ஜந்துக்கள் வாஸம்பண்ணும்படியான நிலவெடிப்பு, ஆற்றங்கரை இந்தவிடங்களிலும்; நடந்துகொண்டும், நின்றுகொண்டும்; வாயு, அக்னி, ப்ராஹ்மணர்கள், ஸூர்யன், ஜலம், பசு இவைகளைப்பார்த்துக்கொண்டும், மலமூத்ரங்களை விடக் கூடாது. ஓரிடத்தை யாகத்திற்குதவாத இலை, செத்தை, கல், கழிகளால் மறைத்து, அங்கவஸ்த்ரத்தால் தலையை மூடிக்கொண்டு, மௌனமாய், இரவில் தெற்குமுகமாயும், பகலிலும் ஸந்திகளிலும் வடக்குமுகமாயும் மலமூத்ரங்களை விடவேண்டியது. இரவிலாகிலும் பகலிலாகிலும் நிழல், இருட்டுகளால் திகுத் தெரியாதிருந்தாலும், புலி, திருடர்களால் பயமுண்டாயிருந்தாலும் தன்னிஷ்டப்படி மலஜலங்களை விடலாம்.

நெருப்பை வாயினல் ஊதக்கூடாது. ஸ்த்ரீகள் நிர்வாணமாயிருப்பதை ஸம்போககாலத்திலல்லாமல் பார்க்கக்கூடாது. அசுத்தமான வஸ்துவை அக்னியில்போடக்கூடாது. அதில தன் கால்களைக் காய்ச்சக்கூடாது. உயரமாகத் தான் படுத்துக்கொண்டு அக்னியைக்கீழேவைத்தல்; அதைத்தாண்டுதல்; தனது கால்பக்கத்தில் அதை வைத்தல; பிறருக்கு ப்ராணபயமுண்டாகும்படியான கார்யத்தைச்செய்தல்; ஸந்த்யாகாலத்தில் புஜித்தல்; வழிநடத்தல்; தூங்குதல்; காரணமில்லாமல் பூமியைக் குச்சிமுதலியவைகளால் கீறுதல்; தன் தலையில்சூட்டின புஷ்பத்தைத்தானே வாங்கிவெறிதல்; ஜலத்தில் மூத்ரம், மலம், கோழை, அசுத்

தமானவஸ்து, ரக்தம், விஷம் இவைகளையெறிதல்; குடியில்லாத வீட்டில் தனியாய்த்தூங்குதல்; வேதத்தாலும், ஐச்வர்யத்தாலும் மேலானவன் தூங்கும்போது அவனை எழுப்புதல்; மாதவிடாயான ஸ்த்ரீயுடன் பேசுதல்; தன்னை வரிக்காமலிருக்கும்போது யாககார்யத்தில் ப்ரவேசித்தல்; பசு தண்ணீர் குடிக்கும்போதும், கன்று பால்குடிக்கும்போதும் தடைசெய்தல், மற்றொருவருக்குக் காண்பித்தல்; ஆகாசத்தில் இந்த்ரவில்லைக்கண்டவன் அதைப் பிறருக்குக் காண்பித்தல்; தனியாய் வழி நடத்தல்; மலையில் அதிககோரம் தங்குதல்; தர்மமறிந்தவர்களில்லாமலும் விசேஷமாய் வ்யாதிக்கிடமாயுமிருக்கிற ஊரிலும், சூத்ரன் ராஜாவாயிருக்கும் ராஜ்யத்திலும், தர்மமறியாதவர்கள் பாஷண்டிகள் வஸிக்கும் க்ராமத்திலும், சண்டாளர்கள் ஸமீபத்தில்வஸிக்கிற க்ராமத்திலும் வஸித்தல; புண்ணாக்குமுதலிய ஸாரமில்லாத பதார்த்தங்களைப்புஜித்தல்; இரவிலும் பகலிலும் அன்னத்தை அதிகமாக புஜித்தல் (வயிற்றில் பாதியை அன்னத்தாலும் கால்பங்கை ஜலத்தாலும் நிரப்பிக் கால்பங்கை வாயுஸஞ்சரிக்கும்படி விடவேண்டியது); உதயாஸ்தமன காலங்களில் போஜனஞ்செய்தல்; வீண்சேஷ்டைகளைச்செய்தல்; தண்ணீரை இரண்டு கைகளாலும் எடுத்துக் குடித்தல்; பக்ஷணங்களை மடியில்வைத்துக்கொண்டு புஜித்தல்; ப்ரயோஜனமில்லாமல் ஸந்தோஷப்படுதல்; சாஸ்த்ரவிரோதமாய்க் கூத்தாடுதல, பாடுதல, வாத்யங்களை வாசித்தல்; கையினால் புஜத்தைத் தட்டுதல; பல்லைமூடிக்கொண்டு இரும்புதல; கொழுப்பினால் கழுதைமுதலியவைபோல் கத்துதல்; வெண்கலப் பாத்ரத்தால காலகழுவுதல; உடைந்த மண்பாத்ரத்திலும் மனஸிற்கு ருசிக்காத பாத்ரத்திலும் புஜித்தல்; பிறரால் உபயோகப்படுத்தப் பட்ட பாதுகை, பாதரக்ஷை, வஸ்த்ரம், பூணூல், அலங்காரம், புஷ்பம், மாலை, கமண்டலம் இவைகளை க்ரஹித்தல; பழக்கப் படாதவைகளையும், பசி, வ்யாதி இவைகளால் பீடிக்கப்பட்டவைகளையும், பின்னமான கொம்பு கண் குளம்பு வால் முதலியவைகளையுடைய எருதுகள் கட்டப்பட்ட வண்டிகளில் ஏறுதல்; (பழகினவைகளையும், வேகமுள்ளவைகளையும், சுபலக்ஷணங்களுள்ளவைகளையும், அழகான வர்ணமுள்ளவைகளையுமிருக்கிற விருஷபங்களை வண்டியில்கட்டிச் சாட்டையால் அதிகமாயடிக்காமல் ப்ரயாணஞ் செய்யவேண்டியது); ஜாமத்துக்குட்பட்ட இளம்வெய்யிலையும், பிணத்தின்புகையையும், உடைந்த ஆஸனத்தையும் விரும்புதல்; நகத்தையும், மயிரையும் தானாக வெட்டுதல்; நகத்தைப் பல்லினாற்கடித்திழுத்தல்; காரணமில்லாமல் மண்கட்

டியையுடைத்தல்; நகத்தால் புண்ணைக்கிள்ளுதல்; தலைமயிருக்குவெளியில் புஷ்பத்தைத்தரித்தல்; எருதின்மேல் ஸவாரிசெய்தல்; வீடு, க்ராமம் முதலியவைகளின் வாசற்கதவு சாத்தியிருக்கும்போது வேறுவழியால் ப்ரவேசித்தல்; இரவில் மரத்தடியில் தங்குதல்; சொக்கட்டான் முதலியவையாடுதல்; தன் பாதக்குறடு பாதரக்ஷைகளைத் தானே கையால் எடுத்துக்கொண்டு போகுதல்; படுக்கையில் உட்கார்ந்துகொண்டும், இடதுகையில் அன்னத்தை வைத்துக்கொண்டும், ஆஸனத்தின்மேல் இலைபோட்டுக்கொண்டும் புஜித்தல்; எள்ளுஸம்பந்தப்பட்ட பதார்த்தங்களை இரவில் புஜித்தல்; நிர்வாணமாகப்படுத்துத் தூங்குதல்; சாப்பிட்ட கையைக்கழுவாமல் வெளியில்போகுதல்; (கால்கழுவின ஈரமிருக்கும்போது புஜிப்பவன் தீர்க்காயுஸையடைகிறான். கால் ஈரம் உலர்ந்தபின் படுக்கவேண்டியது); மலமூத்ரங்களைப் பார்த்தல்; ஆற்றைக் கைகளால் நீந்திக்கடத்தல்; மயிர், சாம்பல், எலும்பு, ஓட்டாஞ்சல்லி, மண்டையோடு, பஞ்சு, உமி இவைகளில் பாதத்தை வைத்தல்; பதிதர், சண்டாளர், வீண் கர்வமடைந்தவர்கள், மூர்க்கர், வண்ணார், செம்படவர் முதலான தாழ்ந்த ஜாதியர்களோடும் ஒரே மரத்தடியில் உட்கார்ந்திருத்தல்; சூத்ரனுக்கு இஹலோகத்திற்குபயோகமான அர்த்தசாஸ்த்ரத்தைத்தருபித்தல்; தனக்குச் சிஷ்யனாகாத சூத்ரனுக்குத் தான் சாப்பிட்ட அன்னத்தைக்கொடுத்தல்; ஹோமஞ்செய்து மிகுந்ததைச் சூத்ரனுக்குக்கொடுத்தல்; இரண்டு கைகளையுஞ்சேர்த்துக்கொண்டு தலையைச்சொறிதல்; வ்யாதியில்லாதிருக்கும்போது தலைஸ்நானம் செய்யாதிருத்தல்; கோபத்தால் பிறரின் தலைமயிரைப் பிடித்திழுத்தல், தலையிலடித்தல்; ஒரு தினத்தில் ஸ்நானஞ்செய்தபிறகு எண்ணையிட்டுக்கொள்ளுதல்; க்ஷத்ரியவம்சத்தில் பிறவாத அரசன், கசாப்புக்கடைக்காரன், வாணியன், கள்ளுக்கடைக்காரன், வேசித்தொழில் செய்பவன் முதலியவர்களிடத்தில் தானம் வாங்குதல், இவை கிருஹஸ்தன் விலக்கவேண்டிய கார்யங்களாம்.

இரவில் நான்காவது ஜாமத்தில விழித்துக்கொண்டு தர்மத்தையும், தனத்தையும் ஸம்பாதிக்கவேண்டிய மார்க்கத்தையும், அதனால் தனக்கு வரும் சரீரப்ரயாஸையையும் ஆலோசித்துப்பிறகு பரமாத்மாவை த்யானிக்கவேண்டியது.

ஆவணி அல்லது புரட்டாசி மாஸங்களில் தன்னுஸூத்ரக்காரர்சொன்ன விதிப்படி பௌர்ணமி திதியில் உபாகர்மஞ்செய்து, ஜாக்ரதையுடன் நாலரை மாஸங்கள்வரையில் வேதமோதக்கட

வன். தை அல்லது மாசிமாஸத்தில், கிருஷ்ணபக்ஷ ப்ரதமையில், பகலில் பதினைந்துநாழிகைக்குமுன் ஊருக்கு வெளியில் வேதங்களுக்கு உத்ஸர்ஜனகர்மம் (உத்ஸர்ஜனம் என்பது வேதம் ஓதி நிறுத்துவதற்கு முன் செய்யும் ஓர் வ்ரதம்) செய்து ஓதுகிறதை நிறுத்த வேண்டியது. இந்தப்படி உத்ஸர்ஜனகர்மஞ்செய்தபின்பு மூன்று நாள்கள், அல்லது தொண்ணூறு நாழிகைகள், அல்லது ஒரு நாள் வரையில் ஓதாமலிருக்கவேண்டியது. பின்பு சுக்லபக்ஷத்தில் மந்த்ரப்ராஹ்மணத்தையும், கிருஷ்ணபக்ஷத்தில் வேதத்தின் அங்கங்களையும் பரிசுத்தனாய் ஓதவேண்டியது.

வ்ரதானுஷ்டமுள்ள ப்ராஹ்மணன், தன் மனைவி ருதுஸ்நானம் செய்திருந்தாலும், அமாவாஸ்யை, சதுர்த்தசி, அஷ்டமி, பௌர்ணமீ தினங்களில் புணரக்கூடாது புஜித்தபின் காரணமின்றி வேடிக்கையாய் ஸ்நானஞ்செய்யக்கூடாது. நோயாளி தலைமுழுகக்கூடாது. பிறப்பு, இறப்பு, க்ரஹணம் இவையன்றிப் பாதிராத்திரியில் ஸ்நானஞ்செய்யக்கூடாது. கட்டின வஸ்த்ரத்துடனும், ஜலத்தின் குணந்தெரியாத குளமுதலியவற்றிலும் ஸ்நானஞ்செய்யக்கூடாது. தைவபிம்பங்கள், மாதா, பிதா, அரசன், வ்ரதானுஷ்டானமுள்ளவன், ஆசார்யன், யாகதீக்ஷைபெற்றவன் இவர்களுடைய நிழலைத்தெரிந்து மிதிக்கவுந் தாண்டவுங்கூடாது. நடுமத்யானத்திலும், அர்த்தராத்ரியிலும், மாம்ஸத்துடன் ச்ராத்தத்தில் புஜித்தபின்னும், இரண்டுசந்திகளிலும, நாற்சந்தியிலும் ஸாவகாசமாய் நிற்கக்கூடாது. அரைப்பு, ஸ்நானஞ்செய்த ஜலம், மூத்ரம், மலம், ரக்தம், கோழை, உமிழ்ந்த தாம்பூலம், வாந்தியெடுக்கப்பட்ட பதார்த்தங்கள் இவைகளில் தெரிந்துநிற்கக்கூடாது. சத்ரு, அவனுடைய மந்த்ரி முதலிய ஸ்நேஹிதர்கள், அதர்மமுள்ளவன், திருடன், பிறர் மனைவி, இவர்களுடன் ஸ்நேஹஞ்செய்யக்கூடாது. இந்தவுலகத்தில் மனிதனுக்கு ஆயுளைக் குறைக்கக்கூடியது பிறர்மனைவியைப்புணர்தலைப்போல வேறில்லை. க்ஷத்ரியன், ஸர்ப்பம், அனேகசாஸ்த்ரங்களோதின ப்ராஹ்மணன் இவர்கள் தற்காலத்தில் இளைத்திருந்தாலும், க்ஷேமத்தைக் கோறினவன் அவர்களை ஒருபோதும் அவமானஞ்செய்யக்கூடாது. மேற்சொன்ன மூவரும் அவமானஞ்செய்பவனை ஸமயத்தில் நாசம்பண்ணுவார்கள்.

முன் தான்செய்த வ்யாபாரமுதலியவையால் தனக்கு நஷ்டம் நேரிட்டாலும் துரதிர்ஷ்டசாலியென்று தன்னை நிந்திக்கக்கூடாது. சாகுமளவும் பொருள்தேட முயற்சிசெய்யவேண்டும். ஐச்வர்யம் கிடைப்பது அருமையென்றெண்ணக்கூடாது. தான்

பார்த்ததையும், கேட்டதையும், ஸத்யமாய்ச்சொல்லவேண்டியது. ஸத்யமாகவிருந்தாலும் ஒருவனுக்கு இஷ்டமில்லாததையும், ப்ரியமாகவிருந்தாலும் அஸத்யத்தையுஞ்சொல்லக்கூடாது; இது வேதத்தில் உபதேசிக்கும் தர்மம். அமங்கலமாயிருந்தாலும் மங்கலமென்றே முன்னஞ்சொல்லிப் பின்னர் அமங்கலத்தைத்தெரிவிக்கவேண்டியது. ஒருவனோடும் வீணாகச் சண்டைபோடவும் வழக்காடவுங்கூடாது. பொழுது விடியாமலிருக்கும்போதும் பொழுதுபோனபின்பும், உச்சியில் ஸூர்யனிருக்கும்போதும், தானொருவனாயும், இன்னானென்றறியப்படாதவனுடனும், சூத்ரனுடனும், வழிநடக்கக்கூடாது. கை கால் கண் குறைந்தவர்கள், ஆறு விரலுள்ளவர்கள், படிப்பில்லாதவர்கள், கிழவர், குரூபிகள், தரித்ரர்கள், ஹீனஜாதியார்கள் முதலியவர்களின் தோஷத்தைச்சொல்லி அவர்களைப் பரிஹாஸஞ்செய்யக்கூடாது. புஜித்த கையைச் சுத்தி செய்யாமல் பசு, ப்ராஹ்மணன், அக்னிகளை இடதுகையாலுந் தொடக்கூடாது. அசுத்தனாயிருக்கும்போது ஆகாசத்தில் ஸூர்ய சந்த்ர நக்ஷத்ரங்களைப்பார்க்கக்கூடாது. ஒருவேளை அசுத்தனாயிருக்கும்போது மேற்சொன்ன பசு முதலியவற்றைத் தொட்டாலும் பரிசுத்தனாய் ஆசமனஞ்செய்து, தன் கண் காது தலை மூக்கு நாபிகளை ஜலத்தைத்தொட்டுத் துடைக்கவேண்டியது. தனக்குத் தினவுமுதலிய தொந்தரவில்லாதபோது, தன் காதுமுதலான இந்த்ரியங்களையும் மயிர்களையும் ரஹஸ்யஸ்தானங்களையும் தொடக்கூடாது. இஷ்டஸித்தியைக்கொடுக்கும்படியான கோரோசனை முதலியவற்றை எப்போதுந் தரிக்கிறவனையும், குருஸேவை செய்கிறவனையும், உள்ளும்புறமும் பரிசுத்தனையும், ஜிதேந்த்ரியனையும், ஜபம் ஹோமம்முதலிய வைதிககார்யங்களில சோம்பலில்லாதவனையுமிருக்கிறவர்களுக்குத் தைவங்களினாலும், மனிதர்களினாலும் தீங்குநேரிடாது.

நாள்தோறும் ஸந்த்யாவந்தனகாலம்போக மற்றக்காலத்தில் சோம்பலின்றி வேதத்தையே ஓதவேண்டியது. ப்ராஹ்மணனுக்கு அதை உயர்ந்த தர்மமாகவும், மற்றதை அதற்குத் தாழ்ந்ததென்றும் சொல்லுகிறார்கள். எப்போதும் வேதமோதுவதாலும், உள்ளும்புறமும் ஆசாரமாயிருப்பதினாலும், ஜபதபங்கள் செய்வதினாலும், ப்ராணிகளுக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பதினாலும், முன்பிறப்பை நினைக்கும்படியான ஞானமுண்டாகின்றது. அதனால் பின்னும் கர்ப்பவாஸம் நேரிடாமலிருக்கும்பொருட்டு வேதத்தையே ஓதி மோக்ஷ ஸுகத்தையுமடைகிறான். பௌர்ணமியிலும் அமாவாஸ்யையிலும் அநிஷ்டநிவர்த்தியின்பொருட்டு

ஸாவித்ரிஹோமத்தையும், சாந்திஹோமத்தையும், மார்கழிமாஸ கிருஷ்ணாஷ்டமிநவமிகளில் பித்ருக்களைக்குறித்து அஷ்டகா அந்வஷ்டகாச்ராத்தங்களையும் சோம்பலின்றிச்செய்யவேண்டியது. தன்னுடைய அக்னிஹோத்ரகிருஹத்திற்குத் தூரமாக மல மூத்ரங்களை விடுதல், கால்கழுவுதல், எச்சிலையெறிதல், மனைவியுடன் புணர்தல் இவைகளைச் செய்யவேண்டியது. பகல் பதினைந்து நாழிகைகளுக்குமுன்னமே மலநிவர்த்தி, ஸ்நானஞ்செய்தல், பல்விளக்குதல், எண்ணெயிட்டுக்கொள்ளுதல், தேவபூஜை, முதலியவைகளைச்செய்யவேண்டியது. அமாவாஸ்யை, பௌர்ணமி முதலிய விசேஷதினங்களில தேவதாவிக்ரஹங்களையும், தார்மிஷ்டர்களான ப்ராஹ்மணர்களையும், தன்னைக்காப்பாற்றுமரசனையும், குருவையும் தர்சிக்கவேண்டியது. பெரியோர்கள், மாதா, பிதா, குரு தன் வீட்டிற்கு வந்தால் விதிப்படி அவர்களை வந்தித்து, தன்னாஸனத்தையவர்களுக்குக்கொடுத்து, அவர்களிருக்குமளவும் கையைக்கூப்பிக்கொண்டு அவர்களின் ஸமீபத்தில் நின்று உபசரித்து, அவர்கள் போகும்போது, பின்னேசென்று வழிவிடவேண்டியது.

வேதத்திலும் தர்மசாஸ்த்ரத்திலும் சொல்லப்பட்ட எல்லாக் கர்மங்களையும், வேதாத்யயனமுதலிய கர்மங்களையும், பெரியோர்களின் அனுஷ்டானத்தையும் சோம்பலின்றி நடத்தவேண்டியது. நல்லொழுக்கத்தினால் தீர்க்காயுஸும், இஷ்டமான புத்ரர்களும், அழிவற்றபொருளும் அடையப்படுகின்றன. நல்லொழுக்கமானது தீங்கையழித்துவிடுகிறது. துராசாரமுள்ளவன் உலகத்தில் நிந்திக்கப்பட்டவனும், துன்பத்தையனுபவிக்கிறவனும், வ்யாதியுள்ளவனும், அற்பஆயுளையுடையவனுமாகிறான். ஆகையால் நல்லொழுக்கமுள்ளவனாயிருக்கவேண்டியது. எந்த நற்குறியில்லாவிட்டாலும் நல்லொழுக்கம், அன்பு, பொறாமையில்லாமை இவைகளிருந்தால் அவன் நூறுவயஸுள்ளவனாயிருப்பான்.

எந்தக்கார்யம் தனக்கு ஸ்வாதீனமில்லாமல், பராதீனமாயிருக்குமோ, அந்தக் கார்யத்தை முயற்சியால் நீக்கவேண்டியது. எது தனக்கு ஸ்வாதீனமாயிருக்குமோ அதை ஜாக்ரதையாய்ச் செய்யவேண்டியது. ஒருவனுதவியாலாகவேண்டியவெல்லாம் துக்கம்; தான் செய்யக்கூடியதெல்லாம் ஸுகம்; ஆகையால் இவ்விரண்டையும் ஸுகதுக்கங்களுக்குச் சுருக்கமான அடையாளமென்றறியவேண்டியது. எந்தக்கார்யத்தைச் செய்யும்போது தன் மனஸிற்குக்களிப்புண்டாகுமோ அதைச்செய்யவேண்டியது; மற்றதை விடவேண்டியது. ஆசார்யன், வேதமோதுவித்த உபாத்யாயன், தாய், தகப்பன், குரு, ப்ராஹ்மணன், பசு, ரிஷி தனக்கு

விரோதஞ்செய்தாலும் அவர்களுக்கு விரோதஞ்செய்யக்கூடாது. தைய்வத்தை ஒப்புக்கொள்ளாமை, வேதத்தையும் தைய்வத்தையும் தூஷித்தல், பகை, டம்பம், அஹங்காரம், கோபம, கொடுமை இவைகளை நீக்கவேண்டியது.

ஒருவனையடிக்கிறேனென்று தடி முதலிய ஆயுதங்களை உயரத்தூக்கவும், அவைகளாலடிக்கவுங்கூடாது. புத்ரன், சிஷ்யன், மனைவி அபராதஞ்செய்தால் அவர்களைக் கயிறு, பிரம்பு முதலியவைகளால் சிக்ஷிக்கவேண்டியது. த்விஜாதியனானாலும், ப்ராஹ்மணனையடிக்கவேண்டுமென்று ஆயுதத்தைக் கையினால் தூக்கினால், நூறுவர்ஷங்களவரையில் தாமிஸ்ரமென்னும் நரகத்தில் விழுகிறான். தெரிந்து கோபங்கொண்டு ப்ராஹ்மணனைச் செத்தை முதலியவற்றால் அடித்தால, இருபத்தொரு ஜனனம் நாய் முதலிய பாப ஜாதியில பிறக்கிறான். ப்ராஹ்மணன் தன்னோடு போர்க்களத்தில், சண்டைக்குவராமலிருக்கும்போது அவன் தேஹத்தில் ரக்தம்வரத்தக்க காயம செய்தால் இறந்தபின் ஞானமில்லாதவனாய்ப் பல துன்பங்களையநுபவிக்கிறான். ப்ராஹ்மணனுடைய தேஹத்திலிருந்து விழுந்த ரகதம் எவ்வளவு புழுதியை இழுக்குமோ, அவ்வளவு வர்ஷங்கள்வரையில, இறந்தபின் நரகத்தில், நாய் நரி முதலான ஜந்துக்கள் அவன் ரக்தத்தைக் குடிக்கின்றன. ஆகையால் தெரிந்தவன ப்ராஹ்மணனை ஒருபோதும் அவமானஞ்செய்யவும், செத்தை முதலானவற்றாலடிக்கவும், ரக்தத்தைச சிந்தவுங்கூடாது. தர்மமில்லாதவனும், பொய்சொல்லிப் பொருள் ஸம்பாதிக்கிறவனும், கொலையில் விருப்பமுள்ளவனுமிருக்கிறவன் இம்மையிலேயே ஸுகப்படமாட்டான். சாஸ்த்ரப்படி தர்மமாக நடப்பவனுக்கு ஒரு துன்பம் நேரிட்டாலும், அவன் அதர்மத்தில் மனம்வைக்கக்கூடாது. ஏனென்றால் அதர்மஞ்செய்கிற பாபிகளுக்குப் பொருள்முதலான ஐஸ்வர்யம் வருவதுபோலிருந்தாலும், அவைகளெல்லாம் சீக்ரத்திலழிந்துபோவதைப் பார்க்கவேண்டியது. உலகத்தில அதர்மஞ்செய்தால் அது பசுவைப்போல் உடனே பலனைக்கொடுக்கிறதில்லை; மெல்லமெல்ல அதன் பலகாலம் வந்து பின்பு செய்தவனை அடியோடேயழித்துவிடும். அதர்மம்செய்தவனுக்கு ஒருவேளை துன்பம்நேரிடாவிட்டாலும் அவன் புத்ரனுக்காவது, பேரனுக்காவது, புத்ரன், பசு, தனம் இவைகளின் நாசம்முதலிய துன்பங்கள் நேரிடுமேதவிரச் செய்த அதர்மம் வீணாய்ப்போகாது. அயலானுக்கு த்ரோஹம்செய்தல் முதலிய அதர்மம்செய்கிறவன், விசுவாசத்துடன் வாழ்கின்றதுபோலும், பிள்ளை பெண்கள் முதலிய அபிவிருத்தியை அடைகின்ற

துபோலும், சத்ருவை ஜயிக்கிறதுபோலும் காணப்பட்டாலும், பின்பு அவன் பேரில்லாமல் எல்லாவற்றுடனும் அழிகிறான். ஸத்யம், தர்மம், நல்லொழுக்கம், சௌசம் இவைகளில் எப்போதும் ப்ரீதிவைக்கவேண்டியது. தன் சிஷ்யன், மனைவி, வேலைக்காரர் களையும் அவைகளை நடத்தும்படி சிக்ஷிக்கவேண்டியது.

வாய், கை, வயிறு, இவைகளையடக்கவேண்டியது. (உண்மை சொல்லுதலே வாயடக்குதல்; ஒருவரையும் பீடியாமலிருத்தலே கையடக்கல; கண்டதைப்புஜிக்க விரும்பாமையே வயிறடக்கல்.) எந்த அர்த்தகாமங்கள் தர்மவிரோதமோ அவைகளையும், பிற்கால த்தில் அஸௌக்யத்தைக்கொடுக்கும் தர்மத்தையும், உலகத்தா ரால் நிந்திக்கப்பட்டவைகளையும் நீக்கவேண்டியது. அதாவது திருடிஸம்பாதிக்கும் பொருளும், தீக்ஷாகாலத்தில் செய்யும் புணர்ச்சியும், தர்மவிரோதமான அர்த்தகாமங்கள். குடும்பியாயிருக்கின்றவன் எல்லாப்பொருளையும் தானஞ்செய்தல, பிற்காலத்திற்கு அஸௌக்யமான தர்மம். கலியுகத்தில மாம்ஸத்தோடு ச்ராத்தஞ் செய்தல், உலகத்தாரால் நிந்திககப்பட்ட கர்மம். உபயோகமில் லாத பொருளையெடுத்தல் முதலான கைசாபல்யத்தையும், ப்ரயோஜனமின்றியலைதல் முதலான கால்சாபல்யத்தையும், பிறர் மனைவியைப்பார்த்தல் முதலான நேத்ரசாபல்யத்தையும், ஜனங்கள் நிந்திக்கும்படியாய்ப்பேசுதல் முதலிய வாக்சாபலயத்தையும், கபடபுத்தியையும், த்ரோஹஞ்செயவதையும், இவைகளில மனஸைவைப்பதையும் நீக்கவேண்டியது.

ஒரு (வ்ரதமுதலான) விஷயத்தில் சாஸ்த்ரம் பலவிதமாய்ச் சொல்லியிருந்தால, தன் தகப்பன், பாட்டன் எப்படி நடந்தார்களோ அப்படியே தானும் நடக்கவேண்டியது. அவனுக்குக் கெடுதிவரமாட்டாது. தனக்கு யாகஞ்செய்துவைத்த ரித்விக், தன் புரோஹிதன், ஆசார்யன், அம்மான், விருந்தாளி, தன்னையடுத்தவர்கள், சிறுவர், நோயாளி, கிழவர், வைத்யன், ஞாதி, மைத்துனன் முதலிய ஸம்பந்திகள், மருமகன் முதலிய பந்துக்கள், தாய, தகப்பன், உடன்பிறந்தவன், மருமகள், ஸஹோதரன், பிள்ளை, மனைவி, பெண், வேலைக்காரர் இவர்களுடன் சண்டைசெய்யக்கூடாது. மேற்சொன்ன ரித்விக் முதலானவர்களுடன் விரோதிக்காமலிருந்தால், தான் தெரியாமல் செய்த பாபங்கள் தொடராது. இவர்கள் செய்த குற்றங்களை மன்னித்தால் கிருஹஸ்தன் மேற்சொலலும் புண்யலோகங்களை அடைகிறான். ஆசார்யன் ப்ரஹ்மலோகத்திற்கும், தகப்பன் ப்ராஜாபதிலோகத்திற்கும், விருந்தாளி இந்த்ரலோகத்திற்கும், ரித்விக் தேவலோகத்

திற்கும், உடன்பிறந்தாள், மருமகள் முதலியவர்கள் அப்ஸரஸ் லோகத்திற்கும், மருமகன் முதலியவர்கள் விச்வேதேவலோகத்திற்கும், மைத்துனன் முதலான ஸம்பந்திகள் வருணலோகத்திற்கும், தாயும அம்மானும் பூலோகத்திற்கும், சிறியோர், கிழவர், தன்னையடுத்தவர்கள் ஆகாசலோகத்திற்கும் காரணமாகிறார்கள். தமயன் தன் பிதாவுக்கு ஸரியாயும், பிள்ளையும் மனைவியும் தன் சரீரமாயும, வேலைக்காரர் தன்னிழலாயும், பெண் தன் தயவுக்குப் பாத்ரமாயும் சொல்லப்படுகிறார்கள். ஆதலால், அவர்களால் பிழை செய்யப்பட்டாலும் வருத்தமின்றிப் பொறுக்கவேண்டியது. அவர்களையுபசரித்தலால் மேற்சொன்ன லோகங்கள் கிடைக்கின்றன.

வேதசாஸ்த்ரங்களில் விசேஷ பாண்டித்யத்தால் தானம்வாங்குதற்கு யோக்யனாயிருந்தாலும அடிக்கடி அதில் மனஸை வைக்கலாகாது. அப்படி அதிகமாகத் தானம் வாங்கினால் இவனுடைய ப்ரஹ்மதேஜஸ் சீக்ரத்தில அழிந்துபோய்விடும். அதிகப்பசியினால் துன்பப்பட்டிருந்தாலும், தெரிந்தவன், பொருள்களின் தர்மாதர்மங்களையும், இந்த மந்த்ரத்தையுச்சரித்து இந்ததேவதையின் ப்ரீதிக்காகக்கொடுக்கிறானென்கிறதையும் அறியாமல் தானம் வாங்கக்கூடாது.

ஸுவர்ணம், பூமி, குதிரை, பசு, அன்னம், வஸ்த்ரம், எள் நெய் இவைகளைக் கல்வியில்லாதவன் தானம் வாங்கினால், உலர்ந்த கட்டையில நெருப்பு வீழ்ந்தாற்போல சாம்பலாகிறான். மறுபடி மனுஷ்ய ஜனமமேயவனுக்கரிது. அப்படிக் கல்வியில்லாதவன் தானம வாங்கினால், ஸுவர்ணதானம் ஆயுளையும், அன்னம, பூமி, பசு இவைகள் சரீரத்தையும், குதிரை கண்ணையும, வஸ்த்ரம் தோலையும், நெய தேஜஸையும், எள் ஸந்ததியையும் அழித்துவிடும். கல்வியில்லாமலும் தபஸ்செய்யாமலுமிருக்கிறவன் தானம் வாங்குவதில் ஆசைவைத்தால், அவன், அந்தத் தானம் வாங்கின பொருளுடன் தண்ணீரில கல்தோணியால் போக யத்னித்தவன்போல், அழிகிறான். ஆகையால் கல்வியில்லாதவன் எந்தத்தானம் வாங்குவதிலும் பயப்படவேண்டியது. அவன் ஸ்வல்ப தானம் வாங்கினாலும் சேற்றிலகப்பட்ட பசுவைப்போலத் துன்பப்படுகிறான். பூனையைப்போல் சூதுள்ளவனுக்கும், கொக்கைப போல் ஹிம்ஸை ஒன்றிலேயே விருப்பமுடையவனுக்கும், தர்மமறிந்தவன் தண்ணீருங் கொடுக்கலாகாது. வேதமோதாதவனுக்குத் தானங்கொடுக்கவுங்கூடாது. இந்த மூவர்க்கும தான் ந்யாயமாய் ஸம்பாதித்த பொருளைக்கொடுத்தாலும் கொடுத்தவனுக்கு உடனே தீங்குண்டாகும். கல்தோணியால் ஆற்றைக்

கடக்க யத்னித்தவன் எப்படி அந்தத்தோணியோடு அழிந்துபோ
வானோ, அப்படியே மூடனுக்குத் தானங்கொடுத்தவன் அம்மூட
னோடு அழிந்துபோவான். தர்மஞ்செய்கிறதாக எங்குஞ்சொல்
லிக்கொண்டு ஸம்பாதித்துக், கும்பலைக்கண்டபோதுமாத்ரம் தர்
மஞ்செய்கிறதுபோல் பாவனைசெய்கிறவன், பிறன்பொருளிலா
சைகொண்டவன், சூதன், டம்பாசாரி, பூனைசகுநன், கொலை
செய்பவன், பிறனது நற்குணத்தைக் கேட்க ஸஹியாதவன்,
கீழ்ப்பார்வையுள்ளவன், கொடுமையுள்ளவன், பிறர் கார்யத்தைக்
கெடுத்து தன் காரியத்தை ஸாதிக்கிறவன், ஏமாற்றுகிறவன், மே
லுக்கு மாத்ரம் வணக்கமுள்ளவன், கொக்குசகுநன் இவர்களுக்
குந் தானங்கொடுக்கக்கூடாது. பாபஞ்செய்கிறவன், தர்மஞ்செய்
கிறதுபோல் ப்ராஜாபத்யவ்ரதமுதலான ப்ராயச்சித்தஞ் செய்து
கொள்ளக்கூடாது. ஸ்த்ரீ, சூத்ரன் இவர்களிடத்தில் தர்மத்துக்
காக இதைச்செய்கிறேனென்று சொல்லவேண்டியது. கிருஹஸ்
தனாயிருப்பவன், ப்ரஹ்மசாரி முதலானவர்களின் வேஷம்பூண்டு
பிக்ஷையெடுத்தால் அவன் அவர்களுக்கு நேரிடும் பாபத்தைய
டைகிறான். இறந்தபின் கோழி முதலான பக்ஷி ஜாதியிலும்
பிறக்கிறான்.

பிறர் வெட்டின குளத்தில் ஒருபோதும் ஸ்நாநஞ்செயயக்
கூடாது; செய்தவனுடைய ஸ்நாநபலம் குளம் வெட்டினவனுக்
கும், அவன் பாபம் இவனுக்கும்வரும். (ஆறு முதலானவைக
ளில்லாவிட்டால், அந்தக்குளத்தில ஐந்து கை மண்ணையெடுத்து
வெளியிற்போட்டுவிட்டு ஸ்நாநஞ்செய்யவேண்டியது.) வாஹ
னம், படுக்கை, ஆஸனம், கிணறு, தோட்டம், வீடு இவைகளை
சொந்தக்காரனுடைய அனுமதியின்றி அனுபவிக்கிறவன், அவன்
பாபத்தில் காலிலொன்றை வாங்கிக்கொள்ளுகிறான். ஆறு, புண்
யதீர்த்தம், தடாகம், கர்த்தம (கர்த்தம் எனபது எண்ணாயிரம்
விரற்கடை நீளத்துக்குக்குறைந்தது), ஓடை, மடு இவைகளில்
ஸ்நானஞ்செய்யவேண்டியது.

தெரிந்தவன் யமங்களை எப்பொழுதும் அடையவேண்டியது.
நியமங்களைத் தினந்தோறும் அவச்யம் அடையவேண்டியதில்லை.
யமங்களைத் தினந்தோறுமடையாவிட்டாலும், நியமங்களை முழு
தும் விட்டுவிட்டாலும் அழிந்துபோய்விடுவான். ப்ரஹ்மசர்யம்,
தயை, பொறுமை, த்யானம், ஸத்யம், நேர்மை, ஹிம்ஸை செய்
யாமை, திருடாமை, எல்லோருக்கும் ப்ரியனாயிருக்கை, இந்த்ரிய
நிக்ரஹஞ்செய்கை என்ற பத்தும் யமம். ஸ்நாநம், மௌனம்,
உபவாஸம், தேவபூஜை, வேதாத்யயனம், பரஸ்திரீகளைப் புண

ராமை, குருசுச்ரூஷை, பரிசுத்தம், கோபமில்லாமை, ஜாக்ரதை என்ற பத்தும் நியமம். வேதமோதினவர்சேர்ந்திருக்காத யக்ஞத்திலும், ஊர்ப்புரோஹிதன், ஸ்த்ரீ, பேடி இவர்கள் செய்யும் யாகத்திலும் ப்ராஹ்மணன் ஒருபோதும் புஜிக்கக்கூடாது. இவர்கள் யாகஞ்செய்தால் பெரியோர்களுக்குத்துன்பமும், தேவர்களுக்கு விரோதமும் நேரிடுகிறபடியால் அந்த யக்ஞத்தில் புஜிப்பதை நீக்கவேண்டியது.

மதம்பிடித்தவன், கோபமுள்ளவன், நோயாளி இவர்களின் அன்னம்; மயிர், புழு இவைகள் விழுந்த அன்னம்; வேணுமென்று காலால்மிதித்த அன்னம்; சிசுஹத்யை செய்தவன் முதலானபாபிகள்பார்த்த அன்னம்; மாதவிடாயானவளுக்குப்போட்டு மிகுந்த அன்னம்; காக்கை, நாய் இவைகள் தீண்டின அன்னம்; பசுவினுல் முகரப்பட்ட அன்னம்; தர்மத்திற்காக சேர்ந்தவர்களுக்கு ஸத்ரத்திற்போடப்பட்ட அன்னம்; வெகுஸாமான்யஜனங்களைக் கூட்டிப்போடும் அன்னம்; வேசியின் அன்னம்; பெரியோர்களுக்கிஷ்டமாகாத அன்னம்; திருடன், பாடகன் இவர்களின் அன்னம்; தச்சனுடைய அன்னம்; வட்டியினுல் பிழைக்கிறவன், தீக்ஷிதன், லோபி, காவலில் வைக்கப்பட்டவன் இவர்களின் அன்னம்; பஞ்சமஹாபாதகன், பேடி, குடிசைக்காரி, டம்பசாரி இவர்களின் அன்னம்; முறிந்துபோனபால், தயிர் முதலானவை; பழைய அன்னம்; சூத்ரனுக்கிட்டு மிகுந்த அன்னம்; வைத்யன், வேட்டைக்காரன், கொடுமையுள்ளவன், எச்சில் பொறுக்கி, அநுலோமஜாதியன் அல்லது அரசன் இவர்களின் அன்னம்; ப்ரஸவித்தவள் ஸௌக்யத்திற்காகச்செய்கிற அன்னம்; சாப்பிடும்போது பங்க்தியில் ஒருவன் எழுந்திருந்தபின் போடப்படும் அன்னம்; தீட்டுக்காரனுடைய அன்னம்; மர்யாதையின்றிப் போடப்படும் அன்னம்; நைவேத்யஞ் செய்யப்படாத அன்னம்; காரணமின்றிச் சமையல்செய்யப்பட்ட மாம்ஸம்; கணவனும் புத்ரனுமில்லாத ஸ்த்ரீயின் அன்னம்; பட்டணத்தில் சமைத்த அன்னம்; பதிதனுடைய அன்னம்; தும்மினஎச்சிற்பட்ட அன்னம்; கோள்சொல்கிறவன், பொய்ஸாக்ஷி சொல்பவன், யக்ஞபலன் முதலான புண்யத்தை விற்பவன், கடுவன், தோணிக்காரன், செய்தநன்றியை மறந்தவன் இவர்களின் அன்னம்; கொல்லன், செம்படவன், கூத்தாடி, தட்டான், பிரம்புவேலை செய்பவன், கத்தி முதலான ஆயுதங்களை விற்பவன் இவர்களின் அன்னம்; வேட்டையாடுகிறதற்காக நாய் வளர்ப்பவன், கள்விற்பவன், வண்ணான், வஸ்த்ரங்களுக்குச் சாயம்போடுகிறவன், கொலைகாரன், கள்வப்